
அக்டோபர்
1994
October

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

இதழ்
45
Issue






இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

A Monthly Information Digest

**Established**
February 1991

P.O. Box -3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

Phone: (416) 920-9250
Fax: (416) 757-7399

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto
&
Catholic Immigration Bureau, Scarborough Region

**Published by**
Thamil Information Research Unit (THIRU)
&
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editors**
Sasi Pathmanathan
V. Vivekananthan

**General Manager**
S.T. Singam

**Production Asst.**
N. Kumaradasan

**Circulation Assts.**
P. Balakumar
P. Sivasubramaniam
R.Rajasegaran

**Typesetting Layout & Design**
Ahilan Associates

**Technical Support**
Haran Graph &
T.V. L. Ananth

**Printers**
Ahilan Associates
(416) 920-9250

**PUBLISHED MONTHLY**
4000 Copies


## *ஆசிரியரிடமிருந்து . . . . . . . . . . . . FROM THE EDITOR*

கனடிய குடிவரவு, பிரஜாவுரிமைச் சட்டங்களில் அரசாங்கம் கொண்டுவரவுள்ள மாற்றங்கள் பற்றி வெளிவந்துள்ள தகவல்கள் பெரும் ஆச்சரியத்துடன் கூடிய அதிர்ச்சியைத் தருபவையாக அமைந்துள்ளன.

ஜேன் கிரட்சியன் தலைமையிலான கனடிய மத்திய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தில் குடிவரவுத்துறை தொடர்பான விடயங்களில் கொண்டுவரப் பட்ட மாற்றங்கள் அனைவரதும் கவனத்துக்குரியவை.

பொதுவாகப் பார்க்குமிடத்து, கடந்த ஓராண்டில் அகதிகள் வருகை வெகுவாகக் குறைந்துள்ளது (குறைக்கப்பட்டுள்ளது). அவர்களை விசாரணையின் பின்னர் ஏற்றுக்கொள்ளும் விகிதாசாரம் சிறிதளவு அதிகரித்துள்ளது. குடும்பங்களை மீள இணைக்கும் திட்டம் வேகமாக்கப்பட்டுள்ளது. பராமரிப்பில் இல்லாத பிள்ளைகள் என்று கூறப்படுபவர்கள் 'ஸ்பொன்ஸர்' திட்டத்தில் 'கடுமை'யாக்கப்பட்டுள்ளனர்.

உலக அகதிகளால் பெரிதும் நேசிக்கப் படுகின்ற நாடாக, மனிதாபிமானமும், கருணையும் மிகுந்த நாடாக கனடிய தேசம் அனைவராலும் போற்றப்படுகின்றது. அகதிகள் விடயத்திலான அதன் தாராள மனப்பான்மை ஜெனிவா விருதினைக் கூடப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் பார்க்கையில், முன்னுக்குப்பின் முரணான திட்டங்களை எந்த நோக்குடன் 'புதிய மாற்றம்' என்ற மகுடத்தில் கனடிய அரசு கொண்டுவர முனைகின்றது என்பது புரியவில்லை.

கனடிய நாடு கடந்த ஐந்து ஆண்டுகளாக புதிய குடிவரவாளர் என்று சொல்லப்படுபவர்கள் விடயத்தில் வரையறுக்கப்பட்ட இலக்குடன் செயற்பட்டுவருகின்றது. ஆண்டொன்றுக்கு இரண்டரை லட்சம் புதியவர்களை கனடாவில் குடியேற அனுமதிப்பது அதன் இலக்கு. இந்தத் தொகை கனடாவின் மொத்தச் சனத்தொகையில் ஒரு வீதமாகும். ஒரேயொரு வீதம் மட்டுமே. அகதிகள், மனைவி, மக்கள், பெற்றார்/உறவினர், வர்த்தகர்கள், சுதந்திரமான குடிவரவாளர்கள் என்ற சகல தரத்தினரையும் இது உள்ளடக்கியதாகும்.

கடந்த ஐந்தாண்டின் புதிய குடிவரவாளர் இலக்கினை ஐம்பதாயிரத்தால் குறைத்து, இரண்டு லட்சம் பேரை மட்டுமே அடுத்தாண்டில் குடியேற அனுமதிக்க அரசாங்கம் ஆலோசித்துள்ளது. அதுமட்டுமன்றிக் கூடுதலாக வர்த்தக முதலீட்டாளர்களையும், சுதந்திரமான குடிவரவாளர்களையும் மட்டுமே அனுமதிப்பது என்றும், அதிலும் ஐரோப்பிய நாட்டினருக்கே அதிக இடம் கொடுத்து முன்னுரிமை அளிப்பது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேரடியாகச் சொல்வதானால் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஹொங்கொங், சீனா, பிலிப்பைன்ஸ் போன்ற ஆசிய நாட்டவர்களின் வரவும், குடியேற்ற அனுமதியும் திட்டமிட்டுக் கட்டுப்படுத்தப்படப் போகின்றது. இதனைப் பகிரங்கமாகக் கூறாமல், ஐரோப்பியருக்கு முன்னுரிமை என்று மட்டும் கூறப்பட்டுள்ளது.

அடுத்ததாக, தற்போதுள்ள 'குடும்பம்' என்ற வட்டத்திலிருந்து, பெற்றார், பூட்டன், பூட்டி, பெற்றாரின் பாராமரிப்பிலுள்ள பிள்ளைகள் ஆகியோரை மெதுவாகக் கழற்றி விடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வாழ்க்கைத் துணை (கணவன் /மனைவி), பராமரிப்பிலுள்ள பிள்ளைகள் ஆகியோர் மட்டுமே குடும்பம் என்ற வட்டத்துக்குள் இருப்பர்.

குடும்பங்கள் மீள இணைதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு, குடும்பத்தின் மூத்தவர்களான பெற்றாரையும், அவர்களது பெற்றார்களையும், பெற்றாருடனுள்ள திருமணமாகாத பிள்ளைகளையும் வெளியில் தள்ளி அவர்களை 'வெளி வட்டத்துக்குள்' கொண்டு செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்படியானால், திருமணமானவர்களுக்கு மட்டும்தான் குடும்ப உறவு, குடும்ப பாசம், குடும்ப இணைப்பு உண்டா? திருமணமாகாத ஒருவரின் குடும்பத்தவர்கள் எனப்படுபவர்கள், அவர்களின் பெற்றார்களும், சகோரர்களும் என்ற பரம்பரை பரம்பரையான கோட்பாடு எங்கே போயிற்று?

பத்தொன்பது வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை, பராமரிப்பிலுள்ள பிள்ளைகள் என்ற பட்டியலிலிருந்து 1992 மார்ச் மாதம் முன்னைய அரசு நீக்கியதால் பாதிக்கப்பட்டது அதிகமாக ஆசிய நாட்டவர்கள்தான். எத்தனையோ இலங்கைத் தமிழ்க் குடும்பங்கள் இதன் காரணமாக மீள இணைவதற்குப் பதிலாக பிளவுபட்டுப் போய் தத்தளித்துக் கொண்டிருப்பதைத் தினமும் கண்டுகொண்டிருக்கிறோம்.

இது போதாதென்று, பெற்றாரையும் பிரித்து விடுவதற்குப் புதிய சட்டம் வரப்போகின்றது. இதனாலும் கூடுதலாகப் பாதிக்கப்படப் போவது இலங்கையர் உட்பட்ட ஆசியநாட்டு மக்கள்தான் என்பதை எம்மவரில் எத்தனைபேர் புரிந்திருப்பார்களோ?

இன்னமும் சட்டம் மாற்றப்படவில்லை. எனவே இதனை எம்மால் முடிந்தவரை எதிர்ப்பதற்கு கொஞ்ச நாட்கள் இருக்கின்றன. கூட்டு முயற்சி இங்கு தேவைப்படுகின்றது.

**எஸ். திருச்செல்வம்**


**ஸ்தாபிதம்**
பெப்ரவரி 1991

**முகவரி**
P.O. Box - 3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

**போன்: (416) 920-9250**
**பக்ஸ் :(416) 757-7399**

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம் -ரொறன்ரோ
&
கத்தோலிக்க குடிவரவு நிலையம் ஸ்காபரோ

**வெளியீடு**
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு
&
அகிலன் அசோஷியேற்ஸ்

**பிரதம ஆசிரியர்**
எஸ் . (திரு) திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
நஞ்சி திரு

**உதவி ஆசிரியர்கள்**
சசி பத்மநாதன்
வே. விவேகானந்தன்

**பொது முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்

**தயாரிப்பு உதவியாளர்**
என். குமாரதாஸன்

**விநியோக உதவியாளர்கள்**
ப. பாலகுமார்
ப. சிவசுப்பிரமணியம்
இ. இராஜசேகரன்

**ஒளி அச்சு வடிவமைப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாப் &
ரி. வி. எல். ஆனந்த்

**அச்சுப்பதிப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்
(416) 920-9250

**மாதாந்த வெளியீடு**
4000 பிரதிகள்

## குடிவரவுச் சட்டத்தில் பாரிய மாற்றங்கள் வருகின்றன

# குடிவரவாளர்கள் தொகை ஐம்பதாயிரத்தால் குறையும்; ஸ்பொன்ஸர் திட்டத்தில் பெற்றாருக்கு இரண்டாமிடம்

## Report urges Immigration cut of 50,000 next year

கனடாவின் தற்போதைய குடிவரவுச் சட்டங்களில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் பற்றியும், இது தொடர்பாக குடிவரவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் தயாரித்துள்ள பதினெட்டுப் பக்க அறிக்கை பற்றியும் 'மூடு மந்திர'மான தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

வெளிநாட்டவர்களின் குடியேற்றத்தை ஐம்பதினாயிரத்தால் குறைப்பதும், 'குடும்பம்' என்ற ஸ்பொன்ஸர் வரையறையிலிருந்து பெற்றாரையும் அவர்களில் தங்கி வாழும் பிள்ளைகளையும், பாட்டன்-பாட்டிமாரையும் அப்புறப்படுத்துவதுமே பிரதான மாற்றங்களாக அமையவுள்ளன.

இதன் பிரகாரம் 1995ம் ஆண்டில் இரண்டு லட்சம் பேர் மட்டுமே கனடாவில் புதிய குடிவரவாளர்களாக அனுமதிக்கப்படுவர். கனடாவில் அகதி நிலை ஏற்கப்படுபவர்களையும் இந்தத் தொகை உள்ளடக்கியதாகவிருக்கும். கடந்த நான்கு ஆண்டுகளாக இரண்டரை லட்சம் பேர் புதிய குடிவரவாளர்களாக அனுமதிக்கப்பட்டு வந்தனர். கணவர்/மனைவி, 19 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் ஆகியோர் மட்டுமே 'குடும்பம்' என்ற வரையறையினுள் அடங்குவர்.

இந்த மாற்றங்கள் பற்றித் திட்டவட்டமாக எதுவும் முடிவு செய்யப்படவில்லை என்று அமைச்சர் சேர்ஜியோ மார்கி கூறியுள்ள போதிலும், இந்த மாதம் 27ம் திகதி கனடிய நாடாளுமன்றத்தில் இந்தத் திருத்தங்கள் தாக்கல் செய்யப்படும் என்று ரகஸிய ஆவணம் தெரிவிக்கின்றது. அதேசமயம், புதிய குடிவரவு மாற்றங்கள் ஒவ்வொன்றினையும் எந்த மாதத்தின் என்ன திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வருவது என்றும் அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்து விட்டதாகவும் நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் ஸ்பொன்ஸர் செய்யப்பட்ட விதங்களும் அவை செயற்படுத்தப்படும் முறைகளும் நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டுள்ளன. நியாயமான தொகையினர் ஸ்பொன்ஸர் செய்தவர்களினால் பராமரிக்கப்படாததால், ஸ்பொன்ஸர் 'முறிவு' நிலைக்குச் சென்றுள்ளது. இதனால் ஸ்பொன்ஸரில் வந்தவர்களைக் கவனிக்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் தள்ளப்பட்டது. இதற்காக வருடமொன்றுக்குச் சுமார் 700 மில்லியன் டாலர்கள் கனடிய வரியிறுப்பாளர்களின் பணத்திலிருந்து செலவு செய்யப்பட்டு வருகின்றது. இதனைத் தவிர்ப்பதற்காகவே ஸ்பொன்ஸர் சட்டத்தில் பெரும் மாற்றங்கள் கொண்டு வரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் 'குடும்பம்' என்ற வரையறை பிரிக்கப்பட்டு, பெற்றாரும் அவர்களில் தங்கி வாழும் பிள்ளைகளும், பாட்டன் பாட்டிமாரும் இரண்டாம் நிலை வகுப்புக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இவர்களை ஸ்பொன்ஸர் செய்வதில் பல கெடுபிடிகள் அமலுக்குக் கொண்டு வரப்படும். இவர்களை அனுமதிக்கும் தொகையும் கட்டுப்படுத்தப்படும். அதாவது, கணிசமான அளவுக்குக் குறைக்கப்படும். இவர்களை ஸ்பொன்ஸர் செய்யும் பிள்ளைகள், அல்லது பேரப்பிள்ளைகள் எந்தச் சமயத்திலும் ஸ்பொன்ஸரை 'முறிக்க' முடியாத நிலையில் பிணை வழங்குமாறும், நிபந்தனைகள் அதிகரித்த ஒப்பந்தப் பத்திரங்களில் ஒப்பமிடுமாறும் கேட்கப்படலாம்.

கணவர்/மனைவி, பராமரிப்பிலுள்ள பிள்ளைகளுக்கான ஸ்பொன்ஸரிலும் அவைகளைத் தகுந்த காரணமின்றி 'முறிய' அனுமதிக்காத வகையிலும், அவற்றினைத் தடுப்பதற்கேற்ற வகையிலும் நிபந்தனைகள் மேலும் கடுமையாக்கப்படவுள்ளன. மறுபுறத்தில், இவர்களை ஸ்பொன்ஸர் செய்த காலத்திலிருந்து ஆறு மாத காலத்துக்குள் கனடா வர விஸா வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**'எஸ்தி'**

புதிய குடிவரவாளர்களுக்கான வருடாந்த இலக்கினை ஐம்பதினாயிரத்தால் குறைப்பதன் மூலம் குடும்ப உறவினர் வருகையே பெருமளவில் பாதிக்கப்படும். வர்த்தக நோக்குடன் பெரும் முதலீட்டாளர்களாக வருபவர்களுக்கும், சுதந்திரமான குடிவரவாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். கல்வி, அனுபவம், மொழித் தேர்ச்சி, வயது, வேலை பெறக்கூடிய சாத்தியமான தகுதி போன்றவைகளை அடிப்படையாக வைத்து தெரிவின்போது புள்ளிகள் வழங்கப்படும். இவர்களுக்குக் கனடாவில் உறவினர்கள் இருந்தால் ஆகக்கூடியது ஐந்து புள்ளிகள் மட்டுமே வழங்கப்படும். இந்தத் தெரிவில் ஐரோப்பியர்களே அதிகளவில் சேர்க்கப்படுவர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வீட்டு வேலையாள்-பிள்ளை பராமரிப்பாளர் என்று கூறப்படும் Live-in Caregivers பிரிவில் கனடாவுக்கு வருபவர்கள் இரண்டு வருடங்கள் இங்கு பணியாற்றிய பின்னர் லான்ட்டுக்கு விண்ணப்பிக்கக் கூடியதாக தற்போதுள்ள சட்டம் அமைந்துள்ளது. இது முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கனடாவின் தற்போதைய பொருளாதார நிலைக்கு இந்தத் திட்டம் உகந்ததல்ல என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குடிவரவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின் மேலும் சில முக்கிய சிபார்சுகள் வருமாறு:

* குடிவரவுத் திணைக்களத்தின் கீழ் அகதிகள் விவகாரம் கவனிக்கப்படுவதை நீக்கி, அகதிகளுக்கெனத் தனியான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை அமல் செய்ய வேண்டும்.

* அகதிகளாக ஏற்கப்படுபவர்கள் தொகையைச் சரியாக நிர்ணயம் செய்து ஒழுங்காக நடைமுறைப்படுத்த வேண்டும்.

* குடிவரவு அகதிகள் சபைக்கான அங்கத்தவர் நியமனங்கள் அரச சேவையாளர் மூலம் நிரப்பப்பட வேண்டும். தற்போதுள்ள நடைமுறை, அதாவது வெளியாரை நியமிக்கும் முறை ஒழிக்கப்பட வேண்டும்.

* சுதந்திரமான குடிவரவாளரைத் தெரிவு செய்யும் முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு புள்ளி வழங்கும் அடிப்படையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். கனடாவின் வேலைவாய்ப்புக்கு ஏற்றதாக இந்த மாற்றம் அமைய வேண்டும்.

* கனடாவின் குடிவரவாளராக வரும் வெளிநாட்டவர்களுக்கான வைத்திய சேவையைத் தனியார் மயப்படுத்தி, குறிப்பிட்ட சில காலத்துக்கு இவர்கள் தனியார் வைத்திய காப்புறுதிகளைப் பெறுமாறு கேட்கப்பட வேண்டும். இதனால் வரியிறுப்பாளர் பணம் மீதப்படுத்தப்படும்.

* கனடாவுக்குள் குற்றவாளிகளாக நீதிமன்ற விசாரணையில் காணப்படும் வெளிநாட்டவர்களை, அவர்களுக்கான தண்டனைக் காலம் முடிவடைந்தவுடன் நாட்டைவிட்டு வெளியேற்றும் அதிகாரம் விசாரணை நடத்தும் நீதிபதிகளுக்கு வழங்கப்படக் கூடியதாகச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

# குடிவரவு அகதிகள் சபைக்கு புதிதாக 57 பேர் நியமனம்

## 57 new appointments to I.R.B

அகதிகள் விவகாரத்தில் நீண்ட அனுபவம் கொண்டவர்கள், திறமையான கனடிய வழக்கறிஞர்கள், உட்பட லிபரல் கட்சியுடன் அரசியல் ரீதியாக நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்று கூறப்படுபவர்களுமாக மொத்தம் 57 பேரை, அகதிகளை நிர்ணயிக்கும் விசாரணையை நடத்தும் கனடிய குடிவரவு அகதிகள் சபைக்கு புதிய உறுப்பினர்களாக குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சர் திரு. ஸேர்ஜியோ மார்கி நியமனம் செய்துள்ளார். இவர்களில் 18 பேர் ஏற்கனவே சபை உறுப்பினர்களாகவிருந்து பதவிக் காலம் முடிவடைந்தவர்கள். இவர்கள் மீண்டும் நியமனமானது இங்கு குறிப்பிடத்தக்கது.

பொதுவாக இச்சபையின் உறுப்பினர்களது பதவிக் காலம் மூன்றாண்டுகள் முதல் ஐந்தாண்டுகள் வரை இருக்கும். லிபரல் அரசாங்கம் பதவிக்கு வந்து ஓராண்டாவதற்குள் மூன்றாவது தொகுதியாக இந்த 57 பேரும் நியமனமாகியுள்ளனர். இவர்களுள் ரொறன்ரோ அகதிகள் விவகார சபை (Toronto Refugee Affairs Council - TRAC) யுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களும், நீண்ட கால முன்னணி உறுப்பினர்களுமான Fay Sims, Colin MacAdam, Robert Adamson ஆகியோர் நியமனம் பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது.

திருமதி Fay Sims அவர்கள் சர்வதேச மன்னிப்புச் சபையின் (Amnesty International) ரொறன்ரோ அலுவலகத்தின் அகதிகள் விவகார இணைப் பதிகாரியாகக் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வந்துள்ளார்.

திரு. கொலின் மக்அடம் அவர்கள் ஜேசுற் அகதிகள் சேவை அமைப்பின் இணைப்பாளரும், கனடிய அகதிகள் சபையின் உபதலைவருமாவார். ரொறன்ரோ அகதிகள் விவகார சபையின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திரு. றொபர்ட் அடம்ஸன் அவர்கள் UNHCR எனப்படும் ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதரகத்தின் ரொறன்ரோ அலுவலகத்தில் கடந்த பல வருடங்களாக சட்ட ஆலோசகராகப் பணிபுரிந்தவர். இவர் ஒரு வழக்கறிஞர்.

இலங்கைத் தமிழரும் கனடிய வழக்கறிஞருமான செல்வி சஷிகா சீவரத்தினம் அவர்களும் இச் சபையின் உறுப்பினராக நியமனமாகியுள்ளார். தற்போதைய குடிவரவு அகதிகள் சபையில் ஒரு தமிழர்கூட இல்லை என்ற குறை இவரது நியமனத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

மீளநியமனம் பெற்ற 18 பேர் தவிர்ந்து புதிதாக இம்முறை நியமனம் பெற்றவர்களில் 27 பேர் ஒன்ராறியோ மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். எட்டுப் பேர் கியுபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் அல்பேர்ட்டாவையும் மூவர் பிரிட்டிஷ் கொலம்பியாவையும் சேர்ந்தவர்கள்.

மீளநியமனம் பெற்ற பதினெட்டுப் பேரில் 11 பேர் ஒன்ராறியோவைச் சேர்ந்தவர்கள். ஆறு பேர் கியுபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்தவர்.

லிபரல் கட்சி ஆட்சிக்கு வந்த கடந்த ஒரு வருடத்தில் ஏற்கனவே சுமார் நூறு பேர் வரை இச்சபைக்கு நியமனமாகினர். திறமையானவர்களும் பொருத்தமானவர்களும் நியமனமானதாக அவ்வேளைகளில் அனைவரும் புகழாரஞ் சூட்டினர்.

ஆனால் இம்முறை நியமனங்கள் பற்றி இரண்டுங் கலந்த கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. தேசிய பத்திரிகைகளும் விமர்சனம் செய்துள்ளன. அரசாங்க ஆதரவாளர்கள், கட்சிப் பிரமுகர்கள், முன்னைய அரசியல்வாதிகள் பலரும் இம்முறை நியமனத்தில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சரியாக ஆங்கிலம் எழுதத் தெரியாத சிலர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக 'ஸன்' பத்திரிகை விமர்சித்துள்ளது.

குடிவரவு அகதிகள் சபையில் காலியான சகல இடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. இம்முறை புதிதாக நியமனம் பெற்ற அனைவருக்கும் பதவிக்காலம் மூன்றாண்டுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சபையில் சுமார் 225 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களது வருடாந்தச் சம்பளம் சுமார் 72,000 டாலரிலிருந்து 85,000 டாலர் வரையாகும்.

# குடிவரவு அகதிகள் சபைக்கு நியமனம் பெற்றுள்ள இரண்டாவது தமிழ்ப் பெண்



1989ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அமைக்கப்பட்டு தொடர்ந்தும் இயங்கி வரும் கனடிய குடிவரவு அகதிகள் சபைக்கு கடந்த மாதம் இடம்பெற்ற 57 நியமனங்களில் தமிழ்ப் பெண்மணி ஒருவரும் இடம்பெற்றுள்ளார். சட்டத் துறையில் பல பட்டங்களைப் பெற்றவரான செல்வி சஷிகா சீவரத்தினம் அவர்களே இந்த நியமனத்தைப் பெற்றவர். மேற்படி சபைக்கு நியமனமான மூன்றாவது தமிழர் என்ற பெருமையையும், இரண்டாவது தமிழ்ப் பெண்மணி என்ற சிறப்பையும் செல்வி சஷிகா பெற்றுள்ளார்.

வாட்டர்லு பல்கலைக்கழகத்தில் சிவில் என்ஜினியரிங் பேராசிரியராகப் பணிபுரியும் திரு. எஸ். ரி. அரியரத்தினம் அவர்களின் மனைவியான திருமதி அரியராணி அரியரத்தினம் அவர்களே இந்தச் சபைக்கு நியமனமான முதலாவது தமிழ்ப் பெண்மணியாவார். குடிவரவு அகதிகள் சபை 1989ம் ஆண்டு அமைக்கப்படுவதற்கு முன்னர் 1986 முதல் 1988 வரை இயங்கி வந்த அகதிகள் தகுதி ஆலோசனைச் சபையில் (Refugee Status Advisory Committee -RSAC) உறுப்பினராகவும், பின்னர் 1989 ஜனவரி முதல் இவ்வாண்டு ஜூன் மாதம் வரை குடிவரவு அகதிகள் சபை உறுப்பினராகவும் திருமதி அரியராணி அரியரத்தினம் கடமையாற்றியுள்ளார்.

இலங்கையில் புகழ்பெற்ற சுப்ரிம் கோர்ட் நீதியரசராகவிருந்த காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா அவர்களின் புதல்வரான திரு. ஸ்ரீகுகன் சிறீஸ்கந்தராசா அவர்கள் கடந்த அரசாங்க காலத்தில் இச்சபையின் உறுப்பினராகப் பணிபுரிந்துள்ளார்.

இந்த வரிசையில் தற்போது கனடிய வழக்கறிஞரான செல்வி. சஷிகா சீவரத்தினம் இச்சபைக்கு நியமனமாகியுள்ளார். 'சேக்கம்' அமைப்பின் தலைவரான திருமதி. புஷ்பா சீவரத்தினம், திரு. சீவரத்தினம் ஆகியோரின் புதல்வியான இவர், இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியாகவிருந்த சுண்டுக்குளியைச் சேர்ந்த கு. நேசையா அவர்களது பேர்த்தியும், ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப மனிதவள அமைச்சின் செயலாளராக இருக்கும் திரு. தேவநேசன் நேசையா அவர்களது சகோதரியின் மகளுமாவார்.

1975ம் ஆண்டு தமது பெற்றாருடன் கனடாவில் குடியேறிய இவர் ஆங்கிலத்துடன் பிரெஞ்சு, இத்தாலி ஆகிய மொழிகளில் நிரம்பிய ஆற்றல் பெற்றவர். சட்டத் துறையில் கலைமாணி, முதுமாணி, கலாநிதிப் பட்டங்கள் பெற்றுள்ளார்.

# ஒன்ராறியோ 'லீகல் எய்ட்' புதிய மாற்றத்தின் கீழ் விசாரணை இடையில் வழக்கறிஞரை மாற்ற முடியாது

## $ 60 million legal aid bailed-out with restrictions

தமிழர் தகவலின் கடந்த மாத இதழில் (ஏழாம் பக்கம்) லீகல் எய்ட் திட்டத்தில் பாரிய வெட்டுகளுடன் கொண்டுவரப்படவுள்ள மாற்றங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த மாதம் ஒன்பதாம் திகதி இது பற்றிய பூரண விபரங்களையும் ஒன்ராறியோ மாகாண அமைச்சு அறிவித்துள்ளது.

வறியவர்களுக்கும், மத்தியதர வர்க்கத்தினருக்குமாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம், படிப்படியாக அவர்களுக்குச் சேவை வழங்க முடியாத ஒன்றாக மாறக்கூடிய அளவில் நிதிப்பற்றாக் குறைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது. இந்த வருடத்துக்கு 60 மில்லியன் டாலர்கள் தேவைப்பட்ட போதிலும் அதனை வழங்க முடியாத நிலைக்கு ஒன்ராறியோ மாகாண அரசு ஆரம்பத்தில் இருந்தது.

தற்போது நீண்ட இழுபறியின் பின்னர் இந்தத் தொகையைக் கடனாகவும், கடனுக்கான பிணையாகவும் வழங்க முடிவாகியுள்ளது. இதற்காகப் பல முக்கிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமான ஒன்று - லீகல் எய்ட் சேர்ட்டிபிக்கட் பெற்று வழக்கறிஞர் ஒருவரைச், சேவைக்கு ஒருவர் அமர்த்தினால் இடைப்பட்ட காலத்தில் வழக்கறிஞரை மாற்ற முடியாது. வழக்கு முடியும் வரை அந்த வழக்கறிஞரை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த ஒழுங்கு முறையின் கீழ், எந்த வேளையிலும் ஒருவர் தமது வழக்கறிஞரை மாற்றி புதியதொரு வழக்கறிஞரைத் தமக்காக ஆஜராக்க உரிமையிருந்தது. இதற்கான காரணம் எதுவாகவுமிருக்கலாம். இதற்காக அவர் செய்ய வேண்டியது மிகவும் சுலபமாயிருந்தது. தாம் புதிதாகத் தெரிவு செய்திருக்கும் வழக்கறிஞரிடம் சென்று, தமது பழைய வழக்கறிஞரின் பெயரையும் முகவரியையும் வழங்குவதுடன், வழக்கறிஞரை மாற்றுவதற்காக சம்மதக் கடிதத்தில் ஒப்பமிடவேண்டும்.

புதிய வழக்கறிஞர் இந்த விடயத்தை எழுத்து மூலம் தமது கட்சிக்காரரின் பழைய வழக்கறிஞருக்கு அனுப்பி வைப்பார். தம்மிடமுள்ள கட்சிக்காரரின் பெயரிலான லீகல் எய்ட் சேர்ட்டிபிக்கட்டை பழைய வழக்கறிஞர் புதிய வழக்கறிஞருக்கு அனுப்பி வைப்பார். இதன் மூலம் புதிய வழக்கறிஞர் தமக்கான வழக்குச் செலவுக் கொடுப்பனவுகளை வழக்கு முடிவடைந்த பின்னர் லீகல் எய்ட் அலுவலகத்துக்குச் சமர்ப்பித்து தமக்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்வார்.

புதிய மாற்றத்தின் கீழான திட்டத்தின் கீழ் மேற்சொல்லப்பட்ட நடைமுறை ஒழிக்கப்படுகின்றது. லீகல் எய்ட் திட்டத்தின் கீழ் ஒருவர் தமக்கென ஒரு வழக்கறிஞரைத் தெரிவுசெய்து அவரது பெயருக்கு லீகல் எய்ட் சேர்ட்டிபிக்கட்டைப் பெற்றுக் கொண்டால், வழக்கு முடியும் வரை தமது வழக்கறிஞரை மாற்றி வேறு வழக்கறிஞரை நியமிக்க முடியாது.

இந்தப் புதிய கட்டுப்பாட்டினால் 1995ம் ஆண்டில் சுமார் இரண்டரை மில்லியன் டாலர்களை மீதப்படுத்த முடியும் என்றும், அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் தலா ஆண்டொன்றுக்கு மூன்று மில்லியன் டாலர்களை மீதப்படுத்த முடியுமென்றும் அரசு எதிர்பார்க்கின்றது.

இவ்வாறு செய்வதன் மூலம் ஏறத்தாழ பத்தாயிரம் லீகல் எய்ட் உதவி

**எஸ்.ரி. சிங்கம்**

பெறுபவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும், 'இது தவிர்க்க முடியாதது' என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

லீகல் எய்ட் திட்டத்தில் கொண்டுவரப்படும் மற்றிரு முக்கிய மாற்றங்கள் பின்வருவன:

* தனிப்பட்ட காயம் ஏற்படுத்தப்பட்டது தொடர்பான வழக்குகள், காணி, வீடு, சொத்து விற்பனை - கொள்முதல் தொடர்பான சில வழக்குகள், மது போதையிலும், கவனயீனமாகவும் வாகனம் செலுத்தியதன் பேரில் தொடரப்படும் சில வழக்குகள் ஆகியவற்றுக்கு லீகல் எய்ட் நிறுத்தப்படவுள்ளது. ஆனால் மறியல் செல்லக்கூடிய அல்லது தொழில் பறிபோகக் கூடிய பாரதூரமான குற்றச்சாட்டுள்ள வழக்குகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படலாம்

* எதிர்ப்புத் தெரிவிக்கப்படாத விவாகரத்து வழக்குகள், எதிர்ப்புத் தெரிவிக்கப்படாத பிணை கோரும் வழக்கு விசாரணைகள் ஆகியவற்றுக்கும் லீகல் எய்ட் நிறுத்தப்படுகின்றது. இந்த நடவடிக்கையினால் மேலும் இரண்டரை மில்லியன் டாலர்களை மீதப்படுத்த முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேசமயம் தற்போது வேலையில்லாப் பிரச்சனை சிறிது சிறிதாகக் குறைந்து வருவதால் பெருமளவிலானவர்கள் அடுத்துவரும் ஆண்டுகளில் வேலைக்குத் திரும்பலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் லீகல் எய்ட் பளு மேலும் குறையலாம் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

எனினும், வசதியற்றவர்களுக்கு இலவச சட்ட சேவை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட லீகல் எய்ட் திட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்களினால் வசதியற்றவர்கள் மேலும் வசதியற்றவர்களாக்கப்படுகின்றார்கள் என்றும், அவர்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றது என்றும் பல்வேறு சமூக சேவை நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேசமயம், அரசாங்கத்தின் புதிய மாற்றத்தினைக் கொண்ட திட்டத்தினை, லீகல் எய்ட்டுக்குப் பொறுப்பான சட்டவல்லுனர்கள் குழுவின் தலைவரான வழக்கறிஞர் Stephen Goudge வரவேற்றுள்ளார். "நெருக்கடியான பிரச்சனைக்குச் சுமுகமான தீர்வு" என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த மாற்றங்களினால் கிறிமினல் வழக்குகளின் சந்தேக நபர்களே கூடுதலாகப் பாதிக்கப்படலாம் என்று பொதுவாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* Restricting a client's ability to change lawyers once a case begins. Law society officials estimate they will save $ 2.5 million off legal aid costs next year by introducing this measure and another $ 3 million in each of the following three years. About 100,000 legal-aid users are expected to be affected.

* Ending legal aid coverage for personal injury suits, some real estate matters, and formalizing restrictions on legal aid for those charged with impaired driving, unless they are facing a jail term or their job is at stake.

* Cutting the fees paid to lawyers representing clients in uncontested divorces and uncontested bail hearings, forecast to save $ 2.5 million a year.

# தீ விபத்துகளைத் தவிர்ப்பதற்கு புதிய விதிகள் ஒன்ராறியோவில் இந்த மாதத்திலிருந்து அமல்

## Amended fire ordinance effect from this month

தீயினால் ஏற்படும் விபத்துகள், உயிரிழப்புகள், சொத்து அழிவுகள் என்பவற்றைத் தவிர்ப்பதற்காக புதிய விதிகள் இந்த மாதம் ஒன்பதாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றன.

அதிஉயர்ந்த பட்சம் தீ விபத்துகளைத் தவிர்த்தல், எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்படுமிடத்து உயிரிழப்புகளையும், சொத்து அழிவுகளையும் இயலுமானவரை குறைத்தல், பாதுகாப்பாக வாழும் தன்மையை உத்தரவாதப்படுத்தல் ஆகிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு பொப் ரே தலைமையிலான அரசாங்கம் 1992ம் ஆண்டில் ஒன்ராறியோ தீயணைப்புச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்தது. அந்த விதிகள் இரண்டு வருட இழுபறிக்குப் பின்னர் இந்த மாதத்தில் அமலுக்கு வருகின்றன.

கனடாவிலேயே சனத்தொகை அதிகூடிய மாகாணமாகவும், பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மாகாணமாகவும் ஒன்ராறியோ விளங்குகின்றது. எனவே சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல்வேறு அழிவு சக்திகளுள் ஒன்றான தீயினால் ஏற்படும் உயிரழிவுகளையும் சொத்து இழப்புகளையும் பாதுகாக்க வேண்டியது முக்கியமாகின்றது. இதனால்தான் ஒன்ராறியோ அரசு புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்ததுடன் நிற்காது அவற்றை அமல்படுத்தவும் முன்வந்துள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் காலத்துக்குக் காலம் தீயணைப்புத் தொடர்பான விதிகளும் (Fire code) தீ பாதுகாப்புத் தொடர்பான விதிகளும் (Fire safety) திருத்தி அமைக்கப்பட்டும் மாற்றி அமைக்கப்பட்டும் வந்துள்ளன. அவ்வப்போது ஏற்பட்ட தீ விபத்துகள், அவற்றுக்கான காரணங்கள் என்பன பற்றி ஆராயப்பட்டதன் பெறுபேறாக மாற்றங்கள் கொண்டுவர முடிந்தது. குறிப்பாக 1980களின் ஆரம்பத்தில் தீ விபத்துகள், அவற்றுக்கான காரணங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென வெப்பர் ஆணைக்குழு (Webber Commission) நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் சிபார்சின் பிரகாரம் தீயணைப்புச் சட்டத்தில் சில உப விதிகள் புகுத்தப்பட்டன.

அதன் பின்னரும்கூட 1989ம் ஆண்டு ரொறன்ரோ மாநகரின் மத்தியின் வாழ்விடப் பகுதியொன்றில் தீயின் காரணமாகப் பத்துப் பேர் உயிரிழக்க நேர்ந்தது. இது போன்ற பல சம்பவங்கள் தீயணைப்பு தொடர்பான விதிகள் பற்றி மேலும் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தையும், அவற்றைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தையும் உணர்த்தி வந்தன.

கனடாவில் சராசரியாக வருடமொன்றுக்கு 400 பேர் தீ விபத்தினால் இறப்பதாகவும், இதில் பெரும்பாலான மரணங்கள் மக்கள் வாழ்விடப் பகுதிகளில் (Residential areas) இடம்பெறுவதாகவும், கனடா தீ பாதுகாப்பு அமைப்பின் Fire Prevention Canada) தலைவர் தெரிவித்துள்ளார். கடந்த எழுபது அல்லது எண்பது வருடங்களுக்கு முன்னர் தீ விபத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க தற்போது இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது எனவும் இதற்குக் காரணம் பல வருடங்களுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்த தீயணைப்பு உபகரணங்களும், முன்னெச்சரிக்கைக் கருவிகளும் இன்னமும் பயன்படுத்தப்படுவதே எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**வே.விவேகானந்தன்**
பி.ஏ (சிறப்பு) இலங்கை

இதனால் தீயணைப்பு உபகரணங்களை நவீனமயப்படுத்துவதுடன், தீயணைப்புச் சட்ட விதிகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதும் மாகாண அரசைப் பொறுத்தளவில் கட்டாயமாகியதுடன் தவிர்க்க முடியாததாகியும் விட்டது. இதற்கான முழுப் பொறுப்பும் கட்டட உரிமையாளரைச் சார்ந்ததாகும்.

நடைமுறைக்கு வரும் புதிய விதிகளின் பிரகாரம், குறிப்பாக 1975ம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட தொடர் அடுக்கு மாடிகளின் தீ எச்சரிக்கும் கருவி (Fire Alarm), முன்னெச்சரிக்கும் கருவி ( Smoke Alarm) என்பனவும் ஆங்காங்கு பொருத்தப்பட்டிருக்கும் தீயணைக்கும் உபகரணங்களும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்பதும், அவை சரியாகச் செயற்படுகின்றனவா என்பது பற்றி அடிக்கடி பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எப்போதாவது, எங்காவது தீ விபத்து ஏற்படுமிடத்து அங்கு வாழும் மக்களின் உயிருக்குப் பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிக்கும் வகையில் போதிய முன்னேற்பாடாக அனைத்தும் இருக்க வேண்டும். புதிய விதிகளின் கீழான ஆகக் குறைந்த பட்ச நடைமுறையாக இது அமைகின்றது.

தொடர் அடுக்குமாடி வீடுகளை இரண்டு வகையாகத் தரப்படுத்தலாம். ஒன்று, ஆறு மாடி வீடுகள் வரை கொண்ட தாழ் உயர் தொடர் அடுக்குமாடி வீடுகள் (Low-rise residential buildings); அடுத்தது - ஏழு மாடிகளிலிருந்து ஆரம்பமாகும் உயர் தொடர் அடுக்குமாடி வீடுகள் (High rise residential buildings).
இவை இரண்டுக்கும் இடையிலான தீயணைப்புப் பாதுகாப்பு விதிகள் வித்தியாசப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

புதிய விதிகளின்படி தீயணைப்பு உபகரணங்களையும் நவீனமயப்படுத்தத் தவறிய கட்டட உரிமையாளர்கள் கால நீடிப்புக் கோரி விண்ணப்பிக்க முடியும். மேற்படி கருவிகளை நவீனமயப்படுத்தாத, அதே வேளை கால நீடிப்புக்கும் விண்ணப்பிக்காத கட்டட உரிமையாளர்கள் மீது அபராதம் விதிக்கப்படும்.

கடந்த ஜுலை மாதம் 26ம் திகதி ரொறன்ரோ மாநகரின் லான்ட்ஸ்ரவுண் பகுதியில் ஒரு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஒரு கர்ப்பிணிப் பெண் உட்பட ஐந்து பேர் மரணமடைய நேர்ந்தது.

இதனையடுத்து ஆகஸ்ட் மாதம் முப்பதாம் திகதி ரொறன்ரோ மாநகரசபையானது தீயணைப்புச் சட்டத்தில் புதிய உபவிதி ஒன்றினை நிறைவேற்றியது. அந்த உபவிதியின் பிரகாரம் ரொறன்ரோ நகரப் பகுதியிலுள்ள வீடுகளில் நில அறை (Basement) உட்பட தளத்திலும் (Floor) முன்னெச்சரிக்கைக்கான புகை கண்டுபிடிக்கும் கருவி (Smoke Detectors) பொருத்தப்பட வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய விதிகள் வடயோர்க், மிஸிஸாகா நகரப் பகுதிகளில் ஏற்கனவே நடைமுறையில் இருப்பது கவனிக்கப்பட வேண்டியது. இந்தப் புதிய உபவிதிகளுக்கமைய புகை எச்சரிக்கைக் கருவி பொருத்தப்படாத கட்டடச் சொந்தக்காரர்கள், வீட்டு உரிமையாளர்களுக்குக் கடுமையான அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்தும் சட்டத்தை மீறி நடப்பவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# பொலிஸ் சட்டமும் 18 வயதுக்கு உட்பட்டவர்களும்; கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய சில விடயங்கள்

## 'Under Eighteen : You and the Police

பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள் பொலிஸாரினால் சந்தேகிக்கப்படும் சம்பவங்கள் தற்போது அதிகரித்து வருகின்றது. முக்கியமாக, வாகனங்கள் செலுத்தும் போதும், மது போதையில் செல்லும் போதும், ஆயுதங்களைத் தங்களுடன் எடுத்துச் செல்லும்போதும் இவ்வாறு நடைபெறுகின்றது. வேறு சில சந்தர்ப்பங்களில் தவறான ஆளடையாளத்தினாலும் சிலர் சோதனை நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவ் வேளைகளில் சட்டம் தெரியாத பலர் சிக்கல்களுக்குள்ளாகின்றனர். இவர்கள் நன்மை கருதி, ஒன்ராறியோ சமூக சட்டக் கல்வி நிலையத்தினால் வெளியிடப்பட்ட பிரசுரத்தை ஆதாரமாகக் கொண்டு தமிழர் தகவல் இணை ஆசிரியர் றஞ்சி அவர்களினால் இக் கட்டுரை எழுதப்பட்டது.

### பொலிஸாரினால் எப்போதாவது நான் இடைமறிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் பொலிஸாரினால் வழி மறிக்கப்பட்டால் அவர்கள் கேட்கும் சகல கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. ஆனால் பொலிஸார் உங்களது பெயர், முகவரி போன்ற விபரங்களைக் கேட்டால் பண்புடன் தெரிவிக்கவேண்டும். முதலில் பொலிசாரிடம் எதற்காக அவர்கள் உங்களுடன் உரையாடுகிறார்கள் என்பதைக் கேட்க உங்களுக்கு உரிமையுண்டு.

நீங்கள் வாகனம் செலுத்திச் செல்லும்போது பொலிசார் உங்களை இடைமறிக்கலாம். அவ்வேளையில் உங்களின் சாரதி லைசன்ஸ், கார்ப்பதிவு, வாகன இன்சூரன்ஸ் போன்ற ஆவணங்களை அவர்கள் பார்க்க விரும்புமிடத்து அவர்களுக்கு அதனைக் காட்ட வேண்டும். தவறுமிடத்து உங்கள் மீது குற்றஞ் சுமத்தப்படலாம்.

### என்னைச் சோதனையிடப் பொலிஸாருக்கு உரிமையுண்டா?

நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கும் வேளையில் அல்லது உங்களைச் சோதனையிட நீங்கள் சம்மதம் வழங்கும் பட்சத்தில் சோதனையிடலாம். உங்களிடம் அல்லது நீங்கள் செல்லும் காரில் ஆயுதங்கள், அல்லது மது போதை வஸ்துகள் இருப்பதாக அவர்கள் சந்தேகித்தால் அல்லது நீங்கள் மதுபோதையில் இருப்பதாகச் சந்தேகித்தால் பொலிஸார் சோதனையிட முடியும். இவ்வகையான சோதனைகள் சட்டபூர்வமானவையா என்று சட்டத்தில் எதுவும் விளக்கமாயில்லை. சட்டத்துக்குப் புறம்பான வகையில் அல்லது நியாயமற்ற முறையில் நீங்கள் சோதனையிடப்படுவதாக நீங்கள் கருதினால் நீங்கள் சோதனையிடப்படுவதை விரும்பவில்லை என்று பொலிஸாருக்குத் தெரிவிக்கலாம். இயலுமானவரை விரைவாக ஒரு வழக்கறிஞருடன் தொடர்பு கொண்டு விஷயத்தைத் தெரிவியுங்கள். ஆனால் பொலிஸார் உங்களைச் சோதனையிடுவதைத் தடுக்க முனையாதீர்கள்.

### நான் கைது செய்யப்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

பொலிஸாரிடம் நீங்கள் கைது செய்யப்பட்டுள்ளீர்களா எனவும், அப்படியானால் என்ன குற்றச்சாட்டுகளின் கீழ் கைதாகியுள்ளீர்கள் என்றும் கேட்கவும். நீங்கள் கைது செய்யப்படாத பட்சத்தில், அங்கிருந்து செல்ல உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் நீங்கள் கைது செய்யப்பட்டிருந்தால் எதற்காகக் கைதாகியுள்ளீர்கள் என்று உங்களுக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டும். அவர்கள் சொல்லத் தவறினால் நீங்கள் கேட்க வேண்டும். உடனடியாக ஒரு வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் வழக்கறிஞர், அல்லது பெற்றார், அல்லது பாதுகாவலர் உங்களருகில் இல்லாதவரை நீங்கள் பொலிஸாரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவோ அல்லது பொலிஸாருடன் கதைக்கவோ தேவையில்லை. சில சமயம் ஏதாவது ஒரு பத்திரத்தை உங்களிடம் தந்து அதில் ஒப்பமிடுமாறு பொலிஸார் உங்களைக் கேட்கலாம். நீங்கள் அதில் ஒப்பமிட வேண்டியதில்லை. நீங்கள் பொலிஸாரிடம் ஏதாவது தெரிவித்திருந்தால் அந்த விடயங்கள் உங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படலாம். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட விடயமானது கட்டாயமாக எழுத்தில் கொடுக்கப்பட்டதாக இருககவேண்டுமென்றில்லை. உங்களுக்கான வழக்கறிஞர் உங்கள் அருகில் இருக்காத வரை நீங்கள் எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என்று பொலிஸாரிடம் கூறலாம்.

நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கும் வேளையிலும் உங்களுக்குச் சில உரிமைகள் உண்டு. நீங்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விடயங்களைப் பொலிஸார் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். உங்களுக்கான உரிமைகள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையானால் அதனை நேரடியாகத் தெரிவிக்கலாம்.

### எனக்கு ஒரு வழக்கறிஞர் தேவையா?

நீங்கள் கைது செய்யப்படும் பட்சத்தில் உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் தேவை. உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் இல்லையாயின் ஒரு வழக்கறிஞரை உங்களுக்கு ஏற்படுத்தித் தருமாறு பொலிஸாரிடம் கேளுங்கள். அல்லது,

* 24 மணி நேரமும் சட்ட சேவை புரியும் நிறுவனத்தில் கடமையிலிருக்கும் சட்ட உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு இலவச சட்ட உதவியைப் பெற முடியும். அதற்கான தொலைபேசி இலக்கத்தைப் பொலிஸார் தருவார்கள்.
* தொலைபேசிப் புத்தகத்தின் மஞ்சள் பக்கங்களைப் புரட்டி வழக்கறிஞர்களின் விபரங்களைப் பெற முடியும். இரவு நேரமானால், மஞ்சள் பக்கத்தில் வழக்கறிஞரின் பெயரைப் பார்த்து, அவரது வீட்டுத் தொலைபேசி இலக்கத்தை வெள்ளைத் தாள் பக்கத்தில் பார்க்கலாம்.

### எனது பெற்றாருடன் நான் தொடர்பு கொள்ள முடியுமா?

நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராக இருந்தால், நீங்கள் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன சட்டப்படி நீங்கள் கைது செய்யப்பட்டிருப்பதை உங்கள் பெற்றாருக்கு அல்லது பாதுகாவலருக்கு பொலிஸார் தெரிவிக்க வேண்டும். உங்களை மட்டுமே விசாரணை செய்வதாயின் பொலிஸார் சிலவேளை உங்கள் பெற்றாருடன் தொடர்பு கொள்ளமாட்டார்கள். உங்கள் பெற்றாருடன் அல்லது பாதுகாவலருடன் தொடர்பு கொள்ள விரும்பினால் நீங்களோ அல்லது உங்கள் பாதுகாவலரோ தொடர்பு கொள்ள முடியும். பொலிஸாருடன் பேசுவதற்கு அல்லது ஏதாவது ஆவணத்தில் நீங்கள் ஒப்பமிடுவதற்கு முன்னர் உங்கள் பெற்றாருடன்/பாதுகாவலருடன்/வழக்கறிஞருடன் பேசவும், அவர்களைச் சந்திப்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

### எனது புகைப்படத்தை அல்லது கைவிரல் அடையாளத்தை எடுப்பதற்குப் பொலிஸாருக்கு உரிமையுண்டா?

உங்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட பின்னர் அவ்வாறு எடுக்கப்படலாம். வழமையாக இவை எங்கே எடுக்கப்பட வேண்டும் என்று உங்களிடம் தெரிவிக்கப்படும். நீங்களே அதனைச் செய்ய வேண்டும். நீங்கள் செய்யத்தவறினால் அதற்காவும் நீங்கள் குற்றஞ் சாட்டப்படலாம்.

### பொலிஸார் என்மீது பலாத்காரம்/ தாக்குதல் மேற்கொள்ள முடியுமா?

சட்டத்தை அமல் செய்யவும், சட்டத்தை நீங்கள் மீறும்போது அதனைத் தடுக்கவும், கைது செய்யப்படும் வேளையில் தப்பிச் செல்ல எத்தனிப்பதை நிறுத்தவும், வரையறுக்கப்பட்ட பலாத்காரத்தை மேற்கொள்ளலாம். உங்களைக் கதைக்கச் செய்யவோ, கேள்விகளுக்குப் பதிலளிக்கச் செய்யவோ உங்கள் மீது பலாத்காரம் பிரயோகிப்பது சட்டத்துக்கு விரோதமான செயல். பொலிஸ் உங்களை சட்டத்துக்குப் புறம்பாக நடத்தினால்:

* குறிப்பிட்ட பொலிஸாரின் பெயரையும், அவரது இலக்கத்தையும் பெறுங்கள்;
* நீங்கள் காயப்பட்டால் ஒரு டாக்டரை உடன் சந்தியுங்கள்;
* உடனடியாக ஒரு வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

குறிப்பிட்ட பொலிஸாருக்கு எதிராக நீங்கள் முறைப்பாடு செய்ய முடியும். உங்கள் வழக்கறிஞர் இதற்கான ஆலோசனையை உங்களுக்கு வழங்குவார்.

கவிஞர் கந்தவனம் தரும்

# கனடிய காட்சிகள்

கனடியப்பெண்

ஆண் பெண் ஆராய்ச்சி பற்றிக் கடந்த மாதம் எழுதியிருந்தேன். அது கனடியக் கலாசாரத்துடன் முரண்பட்டதன் விளைவாக எழுந்த குழப்பம். கனடாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதற்குத் தலைமயிர் மட்டும் அளவுகோலாகிவிட முடியாது.

சுதந்திரம் இரு பாலாருக்கும் இங்கு பொதுவானது. பெண்கள் கட்டாயமாகப் பாவாடை தான் அணிய வேண்டுமென்றில்லை. அவர்கள் ஆண்களைப் போலக் காற்சட்டையும் போடலாம். தலைமயிரைக் கட்டையாகவும் வெட்டலாம். சுருட்டும் புகைக்கலாம். மதுபானமும் குடிக்கலாம். ஆணுக்குச் சரிநிகராகவே நடக்கலாம்.

விளையாட்டுத் துறையிலும் பெண்கள் தங்கள் வல்லமையைக் காட்ட வாய்ப்புகள் உண்டு. அண்மையில் ஒரு கிரிக்கற் போட்டிக்குப் பெண் ஒருவர் நடுவராக இருந்ததைப் பார்த்தேன். கோடை விடுமுறைப் பயிற்சிக் களம் ஒன்றில் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து காற்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பயிற்றுனர் மூவரில் ஒருவர் பெண். ரெனிஸ், நீச்சல், படகு வலித்தல், மல்யுத்தம் போன்ற எல்லா விளையாட்டுகளிலும பெண்கள் தங்கள் வண்ணத்தைக் காட்டி வருகிறார்கள்.

படிப்புத் துறையில் எவ்வித வேறுபாடும் கிடையாது. தொழில்துறையில் மட்டும் அதிக சக்தி தேவைப்படும். கட்டிடக் கலை, உலோகத் தொழில், கனரக வாகனச் சாரதி வேலை, பாதை அமைப்புப் போன்றவற்றைப் பெண்கள் தவிர்த்து வருகிறார்கள். கூடுதலாக மெல்லிய அலுவலக வேலைகளையே பெரும்பான்மையான பெண்கள் விரும்பி ஏற்கிறார்கள்.

குடும்ப, சமுதாய, அரசியல் மட்டங்களிலும் ஆணுக்குரிய உரிமைகள் பெண்ணுக்குமுண்டு. சமையல் பெண்தான் செய்ய வேண்டும் என்றில்லை. மனைவியைக் கணவன் துன்புறுத்தலாகாது. கருத்து வேறுபாடு ஏற்பட்டால் கட்டிய கணவனைக் கைவிடும் உரிமை பெண்களுக்கு இருக்கிறது. சமூக அமைப்புகளிற் பங்கு கொள்ளவும், அரசியலில் ஈடுபட்டு ஆளும் பொறுப்புகளைத் தாங்கவும் பெண்களால் முடியும்.

இவ்விதமான உரிமைகளும் சுதந்திரங்களும் கனடியப் பெண்களுக்குச் சும்மா வந்து குவிந்துவிடவில்லை. உண்மையில் இவற்றையெல்லாம் அவர்கள் போராடியே பெற்றிருக்கிறார்கள். கடந்த நூற்றாண்டு முடியும்வரை பெண்கள் இந்த நாட்டில் ஆண்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மேற்படிப்பு இல்லை; உத்தியோகம் பார்க்க அனுமதி இல்லை; வாக்குரிமை கூடக் கொடுக்கப்படவில்லை; வீட்டுப்பராமரிப்புக்குரியவர்களாகவே அவர்கள் கருதப்பட்டனர். இந்த நிலை கனடாவில் மட்டுமன்றி அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கும் பொதுவாகவிருந்தது.

1875ம் ஆண்டிலேயே கனடாவில் பெண்ணொருத்தி மவுன்ட் எலிசன் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடிக்கக் கூடியதாகவிருந்தது. இதனைத் தொடர்ந்து ஏனைய பல்கலைக்கழகங்களும் பெண்களை அனுமதிக்க முன்வந்தன. கல்வி வாய்ப்பு, தொழில் துறைகளிலும் பெண்களை முன்னேற வைத்தது. இருப்பினும் ஆண்களுக்கு அதிக சம்பளம், பெண்களுக்குக் குறைந்த சம்பளம் என்ற வேறுபாடு இப்பொழுதும் தொடர்கிறது. வடஅமெரிக்காக் கண்டத்திலே சரிசம சம்பளத்தைச் சட்டமாக்கிய முதல் மாகாணம் ஒன்ராறியோவேயாகும். இதுவும் 1987ஜுன் மாதத்தில் நடைபெற்றது. பெண்களுக்கு முதன்முதலில் (1816ல்) வாக்குரிமையைக் கொடுத்த பெருமை மனிட்டோபா மாகாணத்துக்குரியது.

இவ்விதம் படிப்படியாகத் தமது உரிமைகளை வென்றெடுத்த பெண்குலம் இன்று ஆண்களுக்குச் சரிநிகராகப் பலதுறைகளிலும் ஈடுபட்டு நாட்டு முன்னேற்றத்துக்கு உழைத்து வருகிறது.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லைக் காணென்று கும்மியடி! -பாரதியார்

# கனடா 'போர்ட்டலோ' பிரிட்டனுக்கு ஏற்றுமதி

## ஒரு சாதனை

பிரிட்டனில் தலைமையகத்தைக் கொண்ட 'போர்ட்டலோ' குளிர்பானம் கடந்த இரு வருடங்களுக்கும் மேலாக கனடாவிலும் தயாரிக்கப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். கனடிய 'ஸ்பிறிங்' நீரினைப் பயன்படுத்தி நான்கு வகையான சுவையுடன் போர்ட்டலோ இங்கு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இங்குள்ள தமிழர் வர்த்தக நிலையங்களில் மட்டுமன்றி கனடியர்களதும் வேற்று நாட்டவர்களதும் கடைகளிலுமாக சுமார் அறுநூறுக்கும் அதிகமான வர்த்தக நிலையங்களில் தற்போது 'போர்ட்டலோ' குளிர்பானங்கள் விற்பனையாகி வருகின்றன.

கனடாவில் தயாரிக்கப்படும் போர்ட்டலோ குளிர்பானம் கடந்த மாதம் முதற் தடவையாக பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு ஒரு சாதனை செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்த கனடா போர்ட்டலோ நிறுவன அதிபர் திரு. இராஜதுரை (ராஜா) அவர்கள், அங்குள்ள குளிர்பான விற்பனை நிலையமொன்றுடன் இதற்கான ஒப்பந்தத்தைச் செய்திருந்தார். இதனடிப்படையில் 800 பெட்டி ( 22,000 போத்தல்கள்) போர்ட்டலோ அங்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்டது. மாதாமாதம் இதனை அனுப்பவும் ஏற்பாடாகியுள்ளது.

ரொறன்ரோவில் நடைபெறும் பல்வேறு தமிழர் விழாக்களுக்கும் இலவசமாக போர்ட்டலோ குளிர்பானங்களை வழங்கி வரும் திரு. இராஜதுரை அவர்கள், அப்பணியினை விஸ்தரிக்கப் போவதாகவும், தமிழ்ச் சிறார்கள் சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளும் வேளைகளில் அவர்களுக்குத் தேவையான குளிர்பானங்களை இலவசமாக வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

# கவிஞர் கந்தவனம் எழுதிய 'விநாயகப் பா' விற்பனைக்கு வந்துள்ளது

மணிவிழாக் கவிஞர் வி. கந்தவனம் அவர்களால் எழுதப்பட்டு இந்தியாவில் பிரசுரஞ் செய்யப்பட்ட 'விநாயகப் பா' கவிதை நூல் தற்போது கனடாவில் விற்பனைக்கு வந்துள்ளது. விரும்புபவர்கள் இங்குள்ள தமிழர் கடைகளில் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும். கவிஞரின் மணிவிழாப் பிரசுரமாக இது வந்துள்ளது.

# அகதிகள் வருகை 50 வீதத்தால் வீழ்ச்சி ஏற்கப்படும் விகிதாசாரம் 68 ஆக உயர்வு

## இவ்வருட முதல் 6 மாதத்தில் இலங்கையர்கள் 1760 பேர் ஏற்கப்பட்டனர்; 237 பேர் நிராகரிப்பு

## IRB acceptance rate up to 68% this year

கனடாவுக்குப் புதிதாக அகதிகளாக வருபவர்கள் தொகை வெகுவாகக் குறைந்துள்ளது. அதனால் கடந்த ஆண்டிலும், இவ்வாண்டின் முற்பகுதியிலும் அகதிகளாக வந்தவர்களின் விசாரணைகள் வேகமாக நடத்தப்பட்டுத் தீர்ப்புகளும் துரிதமாக வழங்கப்படுகின்றன.

அதேசமயம், விசாரணையின் பின்னர் ஏற்கப்படும் அகதிகள் தொகை விகிதாசார ரீதியாக அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களிலும் தீர்ப்பு வழங்கப்பட்ட 13297 அகதிகளின் விசாரணையில் 9092 பேர் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் விகிதாசாரம் அதிகரித்துள்ளது. இந்த வருடத்தின் முதல் மூன்று மாதத்திலும் ஏற்கப்படுபவர்கள் விகிதாசாரத்தில் 57 ஆக இருந்தனர்.

1990ம் ஆண்டுக்குப் பின்னர் அகதிகள் ஏற்றுக் கொள்ளப்படுவது இப்போதுதான் மேலோங்கிச் செல்ல ஆரம்பித்துள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியது. 1989ல் 76 வீதமும், 1990ம் ஆண்டில் 70 வீதமும், 1991ல் 64 வீதமும், 1992ல் 57 வீதமும், 1993ல் 46 வீத்முமாக ஏற்கப்படுவோர் தொகை இருந்தது. இந்த ஆண்டின் முதல் அரைப் பகுதியில் இது 68 வீதமாகியுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களிலும் 4205 அகதிகள் நிராகரிக்கப்பட்டுள்ளனர். இது மொத்தத் தொகையின் 32 வீதமாகும். இது தவிர 2101 அகதிக் கோரிக்கையாளர்கள் அதனைக் கைவிட்டுள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர். இவ்வளவு தொகையானவர்கள் இவ்வாறு நடந்து கொண்டது இதுவே முதல் தடவையாகும்.

நாடு முழுவதும் இந்தக் காலப்பகுதியில் விசாரணை செய்யப்பட்ட அகதிகளில் 3500 பேர் (27 வீதத்தினர்) துரித விசாரணை முறையின் கீழ் (Expedited hearing process) விசாரிக்கப்பட்டது கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயம். புதிய அகதிகள் வருகைத் தொகை குறைந்துள்ளதால், கடந்த மார்ச் மாதத்தில் விசாரணையை எதிர்பார்த்துத் தேக்க நிலையிலிருந்த 17,000 கோவைகள், ஜுன் மாதத்தில் 14,500 ஆகக் குறைந்துள்ளன.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் இலங்கையர் நிலை எவ்வாறு இருந்தது என்பதைக் கவனிப்போம்:- மொத்தம் 1834 பேரின் விசாரணைகள் நடத்தப்பட்டுத் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1760 பேர் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். 237 பேர் நிராகரிக்கப்பட்டுள்ளனர். 100 பேர் காணாமல் போயுள்ளனர், அல்லது கோரிக்கையை வாபஸ் பெற்றுள்ளனர்.

அகதிகள் ஏற்கப்பட்ட தொகையில் தொடர்ந்தும் இலங்கை முதலிடம் வகிக்கிறது. இரண்டாவதாக சோமாலியா (1552 பேர் ஏற்கப்பட்டனர்) இருந்து வருகிறது. ஆனால் சோமாலியரில் 50 பேர் மட்டுமே நிராகரிக்கப்பட்டனர். இரு நாடுகளும் சேர்ந்து ஏற்கப்படுபவர்களில் 22 வீதத்தைத் தம்வசம் வைத்துள்ளன.

நிராகரிப்பில் இஸ்ரேல் முதலிடம் (366 பேர்) வகிக்கிறது. இரண்டாவது இடத்தை இந்தியாவும் (283 பேர்) மூன்றாவது இடத்தை இலங்கையும் (237 பேர்) வகிக்கின்றன. அகதிகள் வருகை தற்போது 50 வீதமாகக் குறைந்துள்ளதையும் கடைசியாக வெளியான புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

## நிராகரிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளா?

அகதிநிலை கோரிய ஒருவர் நிராகரிக்கப்பட்டு , அதன் பின்னர் மூன்று ஆண்டுகள் கனடாவில் வசித்து, அதில் ஆறு மாதத்துக்குக் குறையாத காலம் சட்டபூர்வமாகத் தொழில் புரிந்திருந்தால் அவர் லான்டட்டுக்கு விண்ணபிக்கலாம் என்று கடந்த ஜுலை மாதம் 7ம் திகதி குடிவரவு அமைச்சர் ஸேர்ஜியோ மார்கி அறிவித்திருந்தார். அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து அடுத்துவரும் 90 நாட்களுக்குள் இவர்கள் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சரின் அறிவித்தல் தெரிவித்திருந்ததுடன் செப்டம்பர் கடைசிப் பகுதியில் இதற்கான மேலதிக விபரங்களுடன் விண்ணப்பப் பத்திரங்களும் வெளியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழர் தகவல் அச்சுக்குப் போகும்வரை (அக்டோபர் 03ம் திகதி) மேலதிக விபரங்கள் எதுவும் வெளிவர வில்லை. எந்த நேரமும் இவை வெளிவரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழர் தகவல் நான்காவது ஆண்டு பூர்த்தி மலர்


தமிழர் தகவல் அடுத்த மூன்று மாதங்களில் தனது ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கவுள்ளது. 1995ம் ஆண்டின் பெப்ரவரி மாத இதழ் நான்காவது ஆண்டு பூர்த்தி மலராக வெளிவரவுள்ளது. மலர் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்கக் கனதியாக, சுமார் நூறு பக்கங்களில் வெளிவரும்.

வழமைபோல தமிழர் தகவல் வருடாந்த விருதுகள், சிறப்பு விருதுகள் வழங்கும் வைபவமாக நான்காவது ஆண்டு மலர் வெளியீட்டு நிகழ்ச்சியினை நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றது.

வருடாந்த, இளைஞர்-யுவதிகள் மாணவர்களுக்கான தொண்டர் சேவை விருதுகளுக்கான விண்ணப்பங்களும் கோரப்படவுள்ளன. தனி ஆட்களும், பொது அமைப்புகளும் இந்த விருதுக்குப் பொருத்தமானவர்களைச் சிபார்சு செய்யலாம். தமிழர் தகவல் ஆண்டு மலரில் பிரசுரிப்பதற்குப் பொருத்தமான கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவை பற்றிய மேலதிக விபரங்கள் அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

1995 பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி உங்கள் தமிழர் தகவலின் நான்காவது ஆண்டு பூர்த்தி விழா. இத்தத் தினத்தை நினைவில் வைத்திருங்கள்!

## அக்டோபர் 29ம் திகதி நேரம் மாறுகிறது




இலையுதிர் காலம் பிறந்து விட்டதால் நேரத்தை ஒரு மணித்தியாலத்தினால் மாற்றவேண்டிய நாளும் வந்துவிட்டது. ஒவ்வொரு வருடமும் கனடாவில் (சச்கச்சுவான் மாகாணம் தவிர) இரு தடவை நேர மாற்றம் நடைபெறுகிறது. அதில், அக்டோபர் மாதக் கடைசி ஞாயிற்றுக்கிழமையும் ஒன்றாகும். இதன்படி, இம்மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (28ம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் வரும் இரண்டு மணியாகும் போது) மணிக்கூட்டினை ஒரு மணி நேரம் பின்னோக்கித் தள்ள வேண்டும். இதற்குச் சுலபமான ஒரு வழி, 28ம் திகதி இரவு படுக்கைக்குப் போகும்போது மணிக்கூட்டினை ஒரு மணி நேரம் பின்தள்ளி விடுவதே.

# வேறொருவரின் பெயரில் பொய்யான தகவலைக் கொடுத்து பற்சிகிச்சை பெற முயல்வது குற்றம்

(இந்தக் கட்டுரை கடந்த மாதம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சியாகும்.) விலைகூடிய பொய்ப் பற்கள்(உ+ம்- Bridgework,Cast metal partial dentures) பாவனைக்கு சௌகரியமாக இருக்கும் விலை குறைந்த கழற்றிப் பூட்டும் (Acrylic partial dentures) பொய்ப் பற்களின் குறைபாடுகள் விலை கூடியவற்றிலும் அதிகமாக இருப்பது இயற்கையே. எனினும் சிலர் விலைகுறைந்த செலவில் பெற்ற பற்களில் விலைகூடிய பற்களின் சுகத்தை எதிர்பார்க்கிறார்கள்.

மேலும் பல் வைத்தியர் கொடுக்கும் மருந்து வகைகளை அவை முடியும் வரை பாவிக்க வேண்டியது அவசியமாகும். ஒரு சிலர் ஒருசில நாட்களின் பின்பு அதை தாமாகவே நிறுத்தி விடுகிறார்கள். அது தவறாகும். மருந்து வகைகளை உட்கொள்ளும் போது ஏதும் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படின் பல் வைத்தியரின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்; அல்லது மருந்து வகைகளை உடன் நிறுத்த வேண்டும்.

பல் வைத்தியர்கள் சிகிச்சை அளிக்கும் போது சிகிச்சை பெறுபவர்களின் சுக-நிலையையே முதல் நோக்காகக் கொண்டு சேவைபுரிய வேண்டும். அவர் அதற்கு எந்தச் சிகிச்சை மிகவும் உயர்ந்ததென்று உங்களுக்கு விளக்குவார். ஒருசிலருக்கு அந்தச் சிகிச்சைக்கு வசதியில்லை என்று கண்டால் வேறு மாற்று சிகிச்சைகள் பற்றியும் உங்களுடன் ஆலோசனை செய்து பின்பு ஒரு சிறந்த சிகிச்சை முறையை எடுக்கின்றார்.

சிகிச்சை பெறுபவர்கள் தமக்கு வழங்கப்பட்ட சிகிச்சை முடிவு பெற்றவுடன் கட்டணம் கட்ட வேண்டிய கடமையை உணர வேண்டும். இது வேறு சேவைகளுக்கு நாம் பணம் செலுத்துவது போலாகும். நாம் டாக்டரிடம் சென்று OHIP அட்டையில் மருந்து பெறுவதைப் போலன்று. வைத்திய அட்டையில் (Health card - OHIP) பல் சிகிச்சை எதுவும் பெற முடியாது. பல் வைத்தியருக்கு அரசாங்கம் டாக்டருக்கு கொடுப்பது போல சிகிச்சைச் செலவுகளை ஈடு செய்வதில்லை. எனவே உங்களுக்கு பல் சிகிச்சை தந்த பல் வைத்தியரின் சிகிச்சைச் செலவுகளை நீங்களே செலுத்த வேண்டியவர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் சிலர் பல சாக்குப் போக்குகள் சொல்லித் தட்டிக் கழிக்க முயற்சிக்கிறார்கள்.

இன்சூரன்ஸ் உள்ளவர்களுக்கு இச் செலவின் முழுத் தொகை அல்லது ஒரு பகுதி வழங்கப்படுகின்றது. எனினும் இந்தக் கட்டணத்தைக் கட்ட வேண்டியது உங்களின் கடனேயாகும். பொதுவாக இன்சூரன்ஸ் கொம்பனிகள் தற்பொழுது முழுப் பணத்தையும் செலுத்துவதில்லை. இதனால் மிகுதிப் பணத்தைச் செலுத்த வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும். இன்சூரன்ஸ் தாபனங்களுக்கும் பல் வைத்தியருக்கும் எதுவித உடன்படிக்கையோ, உறவோ இல்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பின் பல தப்பபிப்பிராயங்களை நீக்க உதவும்.

சில பல்வைத்தியர்கள் மிகுதிப் பணத்தில் ஒரு பகுதியைக் கட்ட வேண்டியதில்லை என்று கூறுமிடத்து எஞ்சிய தொகையைக் கட்டுவதில் அக்கறை கொள்ள வேண்டியது உங்கள் கடமையாகும். எமக்கு வழங்கப்பட்ட சேவைக்குரிய பணத்தை செலுத்தி வைத்தியரின் நல்லெண்ணத்தைச் சம்பாதிப்பது உங்களின் பொறுப்பாகும்.

ஒருசிலருக்கு சில சேவைகளுக்கே அரசு உதவி வழங்கப்படுகிறது. இவர்கள் பெரும்பாலும் Welfare (வெல்ஃவெயர்) பெறுபவர்களாவர். பெறும் சிகிச்சைக்கு உதவி வழங்கப்படாத பட்சத்தில் சேவைக்குக் கட்டணம் செலுத்த வேண்டியது நோயாளிகளின் பொறுப்பாகும். அதை எப்படியாவது பல் வைத்தியர்கள் சரிக்கட்ட வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

வேறொருவரின் பெயரில் சிகிச்சை பெற முனைவது குற்றமாகும். பல் வைத்தியர்கள் உங்களை மதித்து நீங்கள் கொடுக்கும் விபரங்களை உண்மையென நம்பியே உங்களுக்கு சேவையாற்றுகிறார்கள். எனவே அவர்களை ஏமாற்றி வேறொருவரின் அட்டையிலோ பெயரிலோ சிகிச்சை பெறுவது பல்வைத்தியர் உங்களில் மட்டுமல்ல ஏனையோரிலும் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு விரோதமாகும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

**டாக்டர் அ.சண்முகவடிவேல்**
**குடும்ப பல் வைத்தியர்**

இனி இந்த மாதக் கேள்வி பதில்களுக்கு வருவோம்:

கேள்வி: ஞானப்பற்கள் எனப்படும் wisdom பற்கள் முளைக்கும் போது முரசில் போதிய இடமின்மை காரணமாக ஏற்படும் வீக்கம், நோவு முதலிய அசௌகரியமான விளைவுகளிலிருந்து விடுதலை பெறுமுகமாக அவ்வகைப் பற்கள் முளைக்கும்போதே பிடுங்கி அகற்றப்படுவதாக முன்னர் தமிழர் தகவலில் குறிப்பிட்டிருந்தீர்கள். இவ்வாறாக அவ்வகைப் பற்களை முளையிலேயே கிள்ளிவிடுதல், அந்தப் பற்கள் அகற்றப்படும் ஒருவரின் அறிவியல் நிலைமையில் (புத்திக் கூர்மையில்) ஏதாவது நிரந்தரப் பாதிப்பினை ஏற்படுத்திவிடாதா? அல்லது இந்த விடயம் வெறுமனே ஆதாரமின்றிப் பேசப்படும் விடயம் தானா?

பதில்: ஞானப்பற்கள் என்று கூறப்படும் wisdom teethக்கும் அறிவியல் நிலைமைக்கும் உள்ள ஒரே தொடர்பு அந்தப் பற்கள் எமக்கு அறிவு வளர்ச்சியடைந்த பருவத்தில் வாயில் தோன்றுவதே. எமக்கு முதலாவது நிரந்தரப் பற்கள் ஆறு வயதில் முளைக்கின்றன. இது First Molar tooth ஆகும். இது தோன்றும் பொழுது நாம் சிறு பிள்ளையாக இருக்கின்றோம்.

எமது second molar tooth எமக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கும் பொழுது வெளிவருகிறது. எமது கடைசிக் கொடுப்புப் பல் (third molar tooth) சுமார் பதினெட்டு வயதாக ( சிலருக்கு முன்பாகவும்/தாமதித்தும்) வெளிவர ஆரம்பிக்கிறது. எனவே, அவை எமக்கு அறிவு முதிர்ச்சி அடைந்த பின்னர் முளைக்கத் தோன்றுவதாலேயே அவற்றை ஞானப் பற்கள் என்று கூறுகின்றோம்.

பொதுவாக எல்லாருக்கும் நான்கு ஞானப் பற்கள் முளைக்கின்றன. சிலருக்கு இவைகள் உருவாகுவதில்லை. இவர்களில் சிலர் படிப்பில் பெரும் மேதைகளாகவும் இருக்கலாம். எனவே ஞானப்பற்களை அகற்றுவதால் புத்திக் கூர்மைக்கு எத்தகைய குந்தகமும் ஏற்படப்போவதில்லை. ஒரு சில சந்தர்ப்பங்களில் சிகிச்சையின் பின்னர் ஒரு சிலருக்குக் கீழ் உதட்டில் விறைப்பு ஏற்பட வாய்ப்புண்டு. உங்கள் பல் வைத்தியர் இது பற்றி உங்களுக்கு முற்கூட்டியே எச்சரிக்கை செய்ய வேண்டியது அவசியமாகும்.

கேள்வி: முரசு கரைந்து பற்களின் வேர்கள் வெளியே தெரியவந்த பின்னர் பரிகாரம் செய்வதன் மூலம் அந்தப் பற்களைக் காப்பாற்ற முடியுமா?

பதில்: முரசு கரைந்து பற்களின் வேர்கள் வெளியே தெரிவதால் அப்பற்கள் உபயோகமற்றுப் போவதில்லை. இவற்றை நன்கு சுத்தம் செய்து பராமரிப்போமாயின் அவை பல வருடங்களுக்கு நிலைத்து நின்று எமக்கு உதவும் என்று கூறவிரும்புகின்றேன்.

எமது பற்களில் ஒரு சிலவற்றின் முரசு கரைந்திருப்பது பொதுவாக அவதானிக்கப் படுகின்றது. இதற்குப் பல காரணங்களுண்டு. எனினும் இவை ஸ்திரமாக இருக்கும் பட்சத்தில் அவற்றின் முக்கியம் குறைந்து விடுவதில்லை. இவை ஒருவேளை கூச்சத்தன்மையை ஏற்படுத்தலாம்.


முரசு கரைந்த சில பற்களுக்கு (முன்பற்கள்) ginival graft செய்து கரைந்த இடத்தை வேறு இடத்தில் பெறப்பட்ட தசையால் மூடி, முரசு கரைவதால் ஏற்படும் சிதைவை நிவர்த்தி செய்ய முடியும் என்று Periodontist கருதுகின்றனர்.

● ● ● ● ● ● ●

# றிச்மன்ட்ஹில் ஆலய பெருமாள் தீர்த்தோற்சவம்



கனடாவில் கொடியேற்ற உற்சவத்துடன் கூடிய திருவிழாக்கள் நடைபெறும் ஒரேயொரு இந்து ஆலயமாக றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம் திகழுகின்றது. வடஅமெரிக்காவின் மிகப்பெரிய ஆலயமாக விளங்கும் இந்த ஆலயத்தில் வருடாந்தம் மூன்று கொடியேற்ற உற்சவங்கள் நடைபெறுவது சிறப்புக்குரியது. விநாயகப் பெருமான், முருகப் பெருமான், பெருமாள் ஆகிய மூர்த்திகளுக்கே வருடாந்த கொடியேற்ற உற்சவங்கள் நடைபெற்று ரதோற்சவம், தீர்த்தோற்சவம், பூங்காவனம் ஆகியவைகளுடன் முடிவுபெறுகின்றன. ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியில் பெருமாள் உற்சவம் நடைபெற்ற இறுதிநாளன்று ஆலய தீர்த்தக் குளத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்ற வேளையில் இந்தப் படங்கள் எடுக்கப்பட்டன. ( படங்கள்: எமது படப்பிடிப்பாளர்: பி. அன்னதேவன்)





# தமிழர் கலை, கலாசாரம் ஆன்மீகம், ஒழுக்கம் யாவும் உயர்ந்து விளங்க ஆலயங்கள் மையமாக வேண்டும்

மொன்றியல் கியுபெக் சைவ மகாசபைத் தொண்டர்கள் ஆதரவில், அருள்மிகு திருமுருகன் ஆலய கட்டட நிதிக்காக 'பொன்மாலைப் பொழுது' நிகழ்ச்சி செப்டம்பர் 3ம் திகதி பிளேங் சென்ற் கலையரங்கில் நடைபெற்றது. ரொறன்ரோ 'சுருதி' இசைக் குழுவினர் இந்த நிகழ்ச்சியை வழங்கினர். அமெரிக்காவில் வசித்துவரும் நாட்டியக் கலைஞரான திருமதி. பத்மினி இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக இதில் கலந்து கொண்டார்.

கியுபெக் சைவ மகா சபைத் தலைவர் திரு. பரம்சோதி தலைமயேற்க, திரு. அருள் சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்த, நாட்டியப் பேரொளி பத்மினி அவர்களின் கலைப்பணியினை திரு. கே.ரி. சண்முகராசா எடுத்தியம்ப விழா களைகட்டியது. பிரதம விருந்தினர் திருமதி. பத்மினி உரையாற்றுகையில் பின்வருமாறு தெரிவித்தார்: "எமது நாட்டின் கலை கலாசாரம், பண்பாடு, ஆன்மீகம், ஒழுக்கம் யாவும் அமெரிக்க கனடிய நாடுகளில் உயர்ந்து விளங்குவதற்கு சைவக் கோயில்கள் மையமாக வேண்டும். அத்தகைய ஆலயங்களுள் ஒன்றாகவே இங்கு அமையவிருக்கும் அருள்மிகு திருமுருகன் ஆலயம் அமையும் என்பது எனது நம்பிக்கை. கடவுள் வழிபாட்டுக்கு ஆலயம் உதவுவது போன்று ஆடற்கலை வளரவும் உதவிட வேண்டும்" எனவும் கேட்டுக் கொண்டார்.

சைவ மகா சபை சார்பில் திருமதி. கோவிந்தராஜு சர்மா அவர்கள் திருமதி. பத்மினிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பொன் மாலைப்பொழுது நிகழ்ச்சியில் இடம்பெற்ற மொன்றியல் மாணவர்களின் "ராப்" பாடல் நடனம் ரசிகர்களினால் வரவேற்கப்பட்டது. மாணவன் எஸ். சி. எம் ஜெகஜீவனின் 'மைக்கல் ஜாக்ஸன்' பாணி நடனம் வெகுவாக ரசிக்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றது. ஓவியரும் பாடகருமான மொன்றியல் பொன். சிவா வரதராஜன் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தொகுத்து வழங்க, திரு. எஸ். ரவீந்திர மூர்த்தியின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.





# பாடசாலையை விட்டு நீக்கப்பட்ட மாணவர்களுக்கு புனர்வாழ்வு - எதிர்பார்க்கப்படுகின்ற மாற்றம்

ஒன்ராறியோ மாகாணப் பாடசாலைகளில் மொத்தம் நாற்பது மாணவர்கள் வன்முறை பிரயோகித்தார்கள் என்ற காரணத்தினால் சென்ற கல்வி ஆண்டில் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்களிலே ஒருவர் நம்மவர் என்பது வருத்தத்துக்குரியது. இந்த மாணவர்கள் சக மாணவர்களுக்கு உடலில் ஊறு விளைவிக்கக்கூடிய வகையில் வன்முறை பிரயோகித்தனர் அல்லது சட்டப்படி கொண்டு செல்வதற்கு அங்கீகாரம் பெறாத ஆயுதங்களை எடுத்துச் சென்றனர் என்ற காரணங்களாலேயே அவ்விதம் கண்டிக்கப்பட்டனர். இவ்விதம் மாணவர்களைத் தண்டிப்பதில் முதன்மையில் நின்றது ஸ்காபரோ கல்விச் சபையாகும். கடந்த ஜனவரி மாதத்திலிருந்து ஜுன் மாதத்துக்கிடையில் இக் கல்விச் சபை ஏழு மாணவர்களைப் பாடசாலையிலிருந்து நீக்கியுள்ளது. இவர்கள் மீண்டும் புதிய மாணவர்கள் போன்று இந்த வருடம் பாடசாலையில் சேருவதற்கு விண்ணப்பிக்கலாம். தகுதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவாரகள் என பசப்பு வார்த்தை சொல்லி அவரகளை வீட்டுக்கு அனுப்பியது. அவர்களில் இருவர் இவ்வருடம் மீண்டும் பாடசாலையில் சேருவதற்கு விண்ணப்பித்த பொழுது முற்றாகவே அவர்களை நிராகரித்து விட்டது.

மாணவர்களைப் பாடசாலையிலிருந்து நீக்கியது பாடசாலையை ஒரு பத்திரமான சூழல் ஆக்கும் பொருட்டே. இவர்களுடைய ஆக்ரோஷத்துக்கும் வன்முறைக்கும் அப்பாவிகளான சக மாணவர்கள் ஆளாகக்கூடாது என்பது ஒரு காரணமாக இருக்க, இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை ஏனைய மாணவர்களுக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே அடிப்படை நோக்கம். அதேசமயம், பாடசாலை தனது தலையாய கடமையிலிருந்து விலகிச் செல்கிறது என்றே கருதவேண்டும். கல்வியின் அடிப்படைக் குறிக்கோளானது ஒவ்வொரு பிரஜையையும் சிறந்த குடிமகனாக மாற்றுவதற்கு வேண்டிய அடிப்படைத் தகுதிகளைத் தருதலேயாகும். இதனை நிறைவேற்றும் பணி பாடசாலையைச் சார்ந்ததே. ஆகவே வருடமொன்றுக்கு நாற்பது மாணவர்களை உதவாக் கரைகள் என்று பட்டையம் கூறி சமீகத்திலே தூக்கியெறிந்தால் அவர்களை வன்முறையில் நாட்டமுள்ள ஒரு புதிய 'வர்க்க'மாக உருவாக்கிய பெருமை பாடசாலைகளுக்கே உரித்தாகும்.

பாடசாலையை வீட்டு நீக்கப்பட்ட இவர்களுக்குப் புனர்வாழ்வு? 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் கட்டாயக் கல்வி வழங்க வேண்டும் என்று கல்விச் சட்ட மூலம் கூறுகின்றது. எனவே ஒவ்வொரு மாணவனும் வசிக்கும் நகரிலுள்ள கல்விச் சபை அவனது கல்விக்குப் பொறுப்பேற்க வேண்டும். அதேசமயத்தில், "நீ எக்கேடாவது கெட்டுப் போ" என நாட்டின் அரசு கூறிவிட முடியாது. அவர்களை நல்வழிப்படுத்தி சீரிய மக்களாக்க வேண்டிய பணி அரசைச் சார்ந்தது.

ஸ்காபரோ கல்விச்சபை மாணவர்களைக் கடினமாகத் தண்டிப்பதால் சில முறைகளில் கருணை காட்ட முன்வந்துள்ளது. கல்விச் சட்ட மூலத்தின்படி ஒரு மாணவரை அதிக பட்சம் இருபது நாட்களே பாடசாலையிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கலாம். அவ்வாறு நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் பாடசாலையில் சேர்ப்பதற்கு இக் கல்விச்சபை SAFETY (The Scarborough Alternate for Educating Troubled Youths) என்னும் திட்டத்தினை அமல் செய்கின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் பிரச்சனைக்குரிய மாணவர்களைப் பாடசாலை ஒன்றிலே தனியே வைத்திருந்து சாதாரண வகுப்புப் பாடங்களுடன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல், தீர்மானம் எடுத்தல் பற்றியும் பயிற்சி வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டம் பாடசாலையை விட்டு முற்றாகவே நீக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவமாட்டாது.

**பொ. கனகசபாபதி**
மகாஜனா முன்னாள் அதிபர்

இதனால் மெற்றோ பாடசாலைச் சபையும் கல்வி அமைச்சும் ஒருங்கிணைந்து புதிய அமைப்பு ஒன்றினை உருவாக்கியுள்ளன. பாடசாலையை விட்டு முற்றாகவே நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் பாடசாலைக் கல்விக்கு உகந்தவர்களாக மாற்றுவதற்கு இத்திட்டம் முனைகிறது. பாடம் கற்பிக்கும் ஆசிரியர், சமூக சேவை ஊழியர், உளவியலாளர் என்ற பலரின் கண்காணிப்பிலே இந்த மாணவர்கள் கல்வி பயில்வார்கள். காலத்துக்குக் காலம் அவரது மனநிலை மதிப்பீடு செய்யப்பட்டு உகந்த சமயத்திலே சாதாரண பாடசாலைக்கு மாற்றப்படுவார்.

ஸ்காபரோ கல்விச் சபையின் தலைவர் திரு. டேவிட் ஹொறொக்ஸ் இந்தத் திட்டம் அதிக பொருள் விரயமானது என்று கூறியதுடன் நில்லாது தனது கல்விச் சபையினால் சென்ற வருடம் நீக்கப்பட்ட ஏழு மாணவர்களில் மீண்டும் சேருவதற்கு விண்ணப்பித்த இருவரையும் 'அங்கே போங்கள்' என்று கையைக் காட்டிவிட்டு நிற்கிறார். அவர்களின் நடத்தையில் சிறிதும் முன்னேற்றமில்லை. எனவே சக மாணவர்களுக்கு அவர்களால் ஏற்படக் கூடிய ஆபத்து இருக்கவே செய்கிறது எனக்கூறியுள்ளார். உண்மை அதுவல்ல. பிரச்சனையை வேறு ஓர் இடத்துக்குத் தள்ளி விடுகின்ற சுலபமான அணுகுமுறையையே ஸ்காபரோ கல்விச் சபை மேற்கொண்டுள்ளது. இந்த அணுகு முறையினை ஏனைய கல்விச் சபைகளும் மேற்கொள்ள ஆரம்பித்தால் பல பாடசாலைகள் இவர்களுக்கென்றே ஆரம்பிக்கவேண்டி வந்துவிடும்.

இரண்டாவது முக்கிய விடயம்: கனடாவிலுள்ள எல்லாப் பாடசாலைகளுமே தொடர்ந்து பத்து மாதங்கள் வரை இயங்கிய பின்னர் 68-70 நாட்கள் வரை நீண்ட விடுமுறைக்காக மூடப்படுகின்றன. அமெரிக்காவிலே புதிய ஒரு முறை கொண்டுவரப்பட்டு ஓரளவு வெற்றியும் ஈட்டியதாகக் கருதப்படுகின்றது. பாடசாலைக் கல்வி 10 மாதங்களோடு முடிவுறாமல் 12 மாதங்கள் வரை நீடிக்கப்படடுள்ளது. அங்கு 1900 பாடசாலைகளைச் சார்ந்த 140000 மாணவர்கள் இத்தகைய கல்வியினைப் பெறுகின்றார்களாம். இதன் விளைவாக மாணவர்களின் பாடசாலை வரவு பெருமளவிலே அதிகரித்ததுடன் பரீட்சைகளிலே அவர்கள் ஈட்டிய புள்ளிகளும் மேலே சென்றனவாம். பாடசாலையிலிருந்து இடையே நீங்கி நழுவிச் செல்கின்ற பண்பும் அருகிக் கொண்டு சென்றதாம்.

அந்தக் காலங்களில் பிள்ளைகளைத் தமது பண்ணைகளிலே கோடை காலங்களில் வேலைக்குக் கொண்டு செல்வதற்காக பெற்றார்கள் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பாது நிறுத்தி விடுவதுண்டு. பிள்ளைகள் பெற்றாருக்குப் பண்ணைகளில் உதவுவதற்காக கோடை காலத்தில் இரண்டு மாதங்கள் அவை மூடப்பட்டன. இப்போது அவ்வாறு பிள்ளைகள் பண்ணைகளில் வேலை செய்வதில்லை. எனவே அந்த முறையினைத் தொடர்ந்தும் கையாளத் தேவையில்லை.

முழுவருடமும் தொடர்ந்து கல்வி ஊட்டுவது என்பது எமது நாட்டிலே உள்ளது போன்றது என்று நீங்கள் எண்ணுவீர்களாயின் ஏமாந்து விடுவீர்கள். அங்கு நடைபெறுவது போன்றே தொடர்ந்து 60 நாட்கள் பாடசாலையும் அதன் பின்னர் இருபது நாட்கள் விடுமுறையுமாக மூன்று தவணைகள் பாடசாலை நடைபெறும்.


(27ம் பக்கம் பார்க்க)

# றிச்மன்ட்ஹில் ஆலய புதிய அர்ச்சகர்



கனடா றிச்மன்டஹில் இந்து ஆலயத்துக்கு புதிய அரச்சகராக சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்பிர மணியக் குருக்கள் இலங்கையிலிருந்து வருகை தந்துள்ளார். 1960ம் ஆண்டிலிருந்து மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்துடன் தம்மை இணைத்துக் கொண்ட குருக்கள் அவர்கள் திருக்கேதீஸ்வரம் சிவானந்த குருகுலத்தில் சமஸ்கிருத சாஸ்திரங்களைக் குருகுல முறைப்படி தங்கியிருந்து கற்றுத் தேறியவர். பல வருடங்களாக திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் பிரதம அர்ச்சகராகப் பணிபுரிந்து வந்த இவர் கடந்த சில மாதங்களாக ஹட்டன் மாணிக்க விநாயகர் ஆலயத்திலும் தமது சேவையினை விஸ்தரித்திருந்தார். புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலசுப்பிர மணியக் குருக்கள் அவர்கள், கனடாவில் மிகவும் புகழ்பெற்றவர்களான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள், சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் ஆகியோரின் மூத்த சகோதரராவர். றிச்மன்ட்ஹில் இந்து ஆலயத்தில் அமைந்திருக்கும் பிள்ளையார் மூலஸ்தானத்துக்கான பூஜைகளுக்கு இவர் பொறுப்பாக இருப்பதுடன் முக்கிய உற்சவங்களையும் நடத்துவார் என்று தெரியவந்துள்ளது.

# திருமணப்பதிவு அதிகாரி



ஸ்காபரோ, பேர்ச்மவுன்ட் வீதியில் வசிக்கும் சிவஸ்ரீ முருகானந்தசர்மா (நந்தன் ஐயா) தியாகராஜக்குருக்கள் அவர்கள் திருமணப்பதிவு அதிகாரியாக அரசாங்கத்தினால் நியமனஞ் செய்யப்பட்டுள்ளார். இந்த நியமனம் கடந்த மாதம் (1994 செப்டம்பர்) நடுப்பகுதியிலிருந்து அமலுக்கு வந்துள்ளது. இலங்கையில் புங்குடு தீவைச் சேர்ந்தவரான சர்மா அவர்கள் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் கல்வி கற்றவர். யாழ்ப்பாணம் சிவானந்த குருகுலத்தில் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் முறைப்படி சமஸ்கிருத சாஸ்திரங்கள் கற்ற இவர், கனடாவுக்கு வருகை தந்த நாட்களிலிருந்து ஸ்ரீகௌரி மங்கள சேவை நிலையத்தின் ஊடாக திருமண வைபவங்களையும், மற்றும் இந்து மதச் சடங்குகளையும் நடத்தி வருவதுடன் ஸ்காபரோ கந்தசுவாமி ஆலயத்தில் பகுதிநேர அர்ச்சகராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

# அகதிகளின் பிள்ளைகளது பிரஜாவுரிமை, இரட்டைப் பிரஜாவுரிமைகளில் மாற்றம்?

## New Citizenship Act getting ready

கனடிய பிரஜாவுரிமைச் சட்டத்தில் பல மாற்றங்களை விரைவில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உத்தேச மாற்றத்தின் பிரகாரம், இரட்டைப் பிரஜாவுரிமை, கனடியப் பிரஜையற்றவர்களுக்கும் அகதிகளுக்கும் கனடாவில் பிறக்கும் குழந்தைகளுக்குமான பிரஜாவுரிமை, பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கும் கால நிர்ணயம் போன்ற பல விடயங்களில் மாற்றம் கொண்டு வரப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Multiple Citizenship என்றும் Dual Citizenship என்றும் கூறப்படும் பல நாட்டு அல்லது இரட்டை நாட்டுப் பிரஜாவுரிமையை அனுபவிக்கும் சலுகை, கனடியர்களுக்கு இல்லாமல் போகலாம். உதாரணமாக, கனடிய பிரஜாவுரிமை பெறும் வெளிநாட்டவர் ஒருவர், தமது முன்னைய நாட்டுப் பிரஜாவுரிமையை இழக்கக் கூடியதாக மாற்றம் கொண்டுவர ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சட்டத்தின் கீழ் கனடாவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் சுயமாகவே கனடிய பிரஜையாகின்றனர். அகதிக் கோரிக்கையாளர், அகதிநிலை நிராகரிக்கப்பட்டவர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட அகதிகள் ஆகிய சகல பிரிவினரதும் கனடாவில் பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்த உரிமை உண்டு. பிறப்பினால் இவர்கள் அந்த உரிமையைப் பெறுகின்றனர். அறிவிக்கப்பட்டுள்ள மாற்றத்தின் கீழ் இது ரத்தாகி, லான்டட் அந்தஸ்து அல்லது பிரஜாவுரிமை உள்ள பெற்றாருக்குப் பிறக்கும் குழந்தைகளே கனடியப் பிரஜை அந்தஸ்தினைப் பெறக்கூடியதாக இருக்கும்.

பிரஜாவுரிமை வழங்குவதற்கான குடியிருப்புக் காலமும் மாற்றப்படும். தற்போதைய சட்டத்தின்படி, பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து நேராக கடந்துபோன 4 ஆண்டு காலத்துள் 3 ஆண்டுகள் கனடாவில் வசித்திருந்தால் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கலாம். உத்தேச திருத்தத்தின் கீழ் 'கடந்த ஐந்து ஆண்டுக்குள் மூன்று ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும்' என்று மாற்றப்படலாம்.

குற்றவாளிகளையும் கிரிமினல்களையும் நுணுக்கமாக ஆர் சி. எம் பி. அறிக்கையைப் பரிசீலனை செய்து பிரஜாவுரிமை வழங்க அதிகாரம் வழங்கப்படும். கனடிய உத்தியோக மொழிகளில் தேர்ச்சி, கனடிய சட்டத்துக்குக் கூடிய மதிப்பளிக்கும் வகையில் சத்தியப் பிரமாணம் செய்தல், வெளிநாட்டில் பிறக்கும் கனடிய பிரஜைகளின் பிரஜாவுரிமை போன்றவைகளில் மாற்றம் ஆகியவைகளைக் கொண்டு வரவும் புதிய திருத்தத்தில் இடமளிக்கப்படுகின்றது.

# மேலதிக பிரஜாவுரிமை அலுவலகம் ரொறன்ரோவில் யுனிவேர்ஸிட்டி வீதியின் 443ம் இலக்க கட்டடத்தில்

கனடிய பிரஜாவுரிமைத் திணைக்களத்தின் புதிய அலுவலகமொன்று ரொறன்ரோ மத்திய குடிவரவு நிலையத்தின் முதலாம் மாடியில் கடந்த மாதத்திலிருந்து இயங்கி வருகின்றது. சென்.பற்றிக் சப்வேக்கு மேலாக அமைந்துள்ள டன்டாஸ் வீதி/யுனிவேர்ஸிட்டி வீதிச் சந்திப்பில், 443 யுனிவேர்ஸிட்டி வீதி என்னும் முகவரியில் இந்தக் குடிவரவு நிலையம் அமைந்துள்ளது.

பிரஜாவுரிமைத் திணைக்களத்தின் அலுவலகம் ரொறன்ரோவில் 55 சென் கிளயர் வீதியில் பல வருடங்களாக இயங்கி வருகின்றது. ஸ்காபரோவிலும் ஒரு அலுவலகம் அமைந்துள்ளது. இவ் அலுவலகங்களில் பல்லாயிரக்கணக்கானவர்களின் விண்ணப்பங்கள் தேக்க நிலையில் இருப்பதுடன், புதிதாக விண்ணப்பங்களைக் கையளிக்க வேண்டியவர்கள் அதற்காகப் பல மாதங்கள் காத்திருக்க வேண்டியும் இருக்கின்றது. அத்துடன் விண்ணப்பங்களைக் கையளித்தவர்கள் தங்கள் நேர்முகப் பரீட்சைக்காக ஏறத்தாழ எட்டு மாதங்கள் முதல் பத்து மாதங்கள் வரை காத்திருக்கவும் நேருகின்றது. இந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்காகவே புதிய அலுவலகம் 443 யுனிவேர்ஸிட்டி வீதியிலுள்ள குடிவரவு அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மட்டும் மேற்கொள்ளும். பிரஜாவுரிமை விண்ணப்பப் பத்திரங்களை ஏற்கும் நிலையமாக மட்டுமே இது தற்போது இயங்கி வருகின்றது.

அதுவும் கூட எவரும் நேரடியாகச் சென்று தம்பாட்டில் பத்திரங்களைக் கையளிக்க முடியாததாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சென். கிளயர் வீதியிலுள்ள பிரஜாவுரிமை அலுவலகத்துக்கு ஏற்கனவே சென்று, விண்ணப்பப் பத்திரங்களைக் கையளிப்பதற்கு நாள் கேட்டவர்களுக்கு மட்டுமே, கடிதம் மூலம் அதற்கான காலமும், நேரமும் அறிவிக்கப்படுகின்றது. அவர்களில் ஒரு தொகையினர் புதிய அலுவலகத்துக்குச் சென்று விண்ணப்பங்களைக் கையளிக்குமாறு காலமும் நேரமும் குறிக்கப்பட்டுக் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. இவ்வாறு அறிவுறுத்தல் பெறுபவர்கள் தமக்கு வந்த கடிதத்துடன், விண்ணப்பப் பத்திரத்தையும் எடுத்துச் சென்றால் மட்டுமே 443 யுனிவேர்ஸிட்டி வீதி அலுவலகத்தின் முதலாம் மாடிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

# திருட்டு வழக்கில் நிரபராதியான ஒரு ஊழியருக்கு மீண்டும் வேலைவழங்க வேண்டுமென்று சட்டமில்லை

## Employee Firings - Workplace Law

புலம்பெயர்ந்து வந்த நாம் முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழலில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது சீவனோபாய த்துக்காக நாம் எம்மால் முடிந்த அத்தனை வேலைகளையும் செய்து வாழ்க்கையையும் ஓட்டிக் கொண்டிருக்கிறோம். தமது அதிவிசேட திறமை, கல்வித் தகுதிகளைக் காண்பித்து நிரந்தரக் குடியுரிமையுடன் தெரிவுசெய்யப்பட்டு வந்தவர்களைத் தவிர்த்து அனேகமானவர்கள் உணவகங் களிலும், எரிபொருள் நிலையங்களிலும், பாதுகாப்புப் பணிகளிலும் தொழில் பெற்று திருப்தி அடைந்துள்ளனர்.

ஆனால், காலப்போக்கில் தமது விடாமுயற் சியினால் சிலர் தாம் தொழில் புரிந்த நிறுவனங்களைப் போன்ற நிறுவனங்களு க்கே தங்களை அதிபதிகளாக்கிக் கொண் டிருக்கிறார்கள். தாமாகவே சுயதொழில் முயற்சிகளில் இறங்கி வெற்றி கண்டதுடன் தமக்குக் கீழே எம்மவரையும், வேறு இனத்தவரையும் தொழிலுக்கு அமர்த்திக் கொள்ளுமளவுக்கு இவர்கள் வளர்ந்துள்ள மைக்கு இவர்களின் கெட்டித்தனமும், விடாமுயற்சியுமே காரணமாகும்.

வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் நாம் அனைவரும் இங்குள்ள வேலைத்தல சட்ட திட்டங்களை அறிந்து வைத்திருத்தல் இன்றியமையாததாகும். எமது சொந்த நாட்டு வேலைத்தலச் சட்ட திட்டங்கள் வேறு, கனடிய நாட்டுச் சட்ட திட்டங்கள் வேறு என்பதை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். தனக்குரிய உரிமைகள் எவை, சலுகைகள் எவை, பாதுகாப்பான சூழலில் கடமை புரிகின்றோமா என்பவைக ளை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

பாதுகாப்பான சூழலில் நாம் கடமை புரிகின்றோமா என்பதை உறுதி செய்து கொள்ளுதல், தனக்குரிய உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்தில் அல்லது வேறு பிரச்சனைகள் உருவாகும் பட்சத்தில் எந்த வரையறைக்குள் அதற்குரிய நடவடிக்கை களை எடுக்க முடியும் என்பதை ஒவ்வொரு வரும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இவை அவர்கள் புரியும் கடமை களைப் பொறுத்து மாறுபடுமாதலால், ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான வற்றை தமது வேலைத்தலத்திலிருந்தும், உரிய நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரச் சுருக்கத்தின் காரணமாக பலர் வேலை நீக்கம் செய்யப்படுகின்றார்கள். இன்று புதிய தொழில்களைப் பெறுகின்றவர்களிலும் பார்க்க வேலை நீக்கம் செய்யப்படுபவர்களின் தொகையே அதிகமாகும். ஒருவர் என்ன காரணத்து க்காகவும் வேலை நீக்கம் செய்யப்படலாம்; தமக்கு வழங்கப்பட்ட வேலை நீக்கம் பிழையானது என்றால் எந்த அடிப்படையில் வேலைநீக்கத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதிடலாம்; பிழையான வேலைநீக்கத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் எவ்வாறு வெற்றிபெற முடியும் என்பன போன்ற விபரங்களுக்கு இந்தக் கட்டுரைத் தொடரில் விளக்கமாக விபரங்கள் தரப்ப டும். குறிப்பாக ஒன்ராறியோ மாகாணச் சட்டத்தின் அடிப்படையில் இவை எழுதப்படும்.

முதலாவதாக, ஒருவர் வேலை நீக்கம் செய்யப்படக்கூடிய அடிப்படைப் பின்ன ணிகள் எவை என்பதைப் பார்ப்போம். இவற்றை ஒன்பதாகப் பிரித்து ஒவ்வொன் றையும் சட்ட நுணுக்கங்களுடன் தொடர் கட்டுரையில் விரிவாக ஆராய்வோம்.

1. திருட்டு. 2 மோசடி. 3 நோக்கங்களில்

**வேலைத்தல வேலைநீக்க சட்ட திட்டங்கள் - 1**

தென்புலோலியூர்
**எஸ். கிருஷ்ணலிங்கம்**

முரண்படுதல். 4. கீழ்ப்படிவின்மை. 4 கெட்டித்தனமின்மை. 5. ஒழுங்குவிதிகளை மீறுதல். 7. ஒழுங்கு விதிகளில் முரண்படு தல். 8. சுகவீனம். 9. ஒழுங்கற்ற சமுகமளிப்பு.

**1. திருட்டு:** வேலைபுரியும் இடத்தில் திருட்டில் ஈடுபட்ட ஒருவரை வேலை நீக்கம் செய்யச் சட்டம் இடமளிக்கின்றது. சமகா லத்தில் இவர் மீது நீதிமன்ற விசாரணையும் நடைபெறுகின்றது என வைத்துக் கொள் வோம். நீதிமன்ற விசாரணை முடிவில் குற்றத்தை நிருபிக்கத் தவறும் பட்சத்திலோ அன்றி சாட்சியங்களின் தவறுதலினாலோ அன்றி வேறு எக்காரணத்தினாலோ திருட்டுக் குற்றச்சாட்டிலிருந்து ஒருவர் விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்ப டுவாரானால் அந்த ஊழியர் மீண்டும் பழைய வேலைக்குச் செல்லும் போது அவருக்குக் கட்டாயம் அந்த வேலை மீண்டும் வழங்கப்பட வேண்டுமெனப் பலரும் நினைக்கிறார்கள்.

அவ்வாறு வேலை வழங்க மறுக்கப்படு மிடத்து, ஒரு ஊழியர் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறி நீதிமன்றத்தில் தொழில் வழங்குனருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். தன்னைச் சுற்றவாளியெனக் கண்டு நீதிமன்றம் சகல குற்றங்களிலிருந்தும் விடுவித்திருந்தும் கூட தொழில் வழங்குனர் தனக்கு மீண்டும் வேலை வழங்க மறுத்து அநீதி இழைத்து ள்ளார் என்று வாதிட்டாலும், தான் வேலை நீக்கம் செய்தது சரியெனக் கூறி தொழில் வழங்குனரால் அந்த வழக்கில் வெற்றி கொள்ள முடியுமென்பதை மறக்கக்கூடாது.

ஒரு குற்றவியல் வழக்கைப் பொறுத்தளவில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு தொழிலாளி தனக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டின் மீது நியாயமான ஒரு சந்தேகத்தை நீதிமன்றத்தில் உருவாக்கி, அந்தச் சந்தேக த்தை நிலைப்படுத்தினாலே, அவர் தனக் கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை உடைக்கக்கூடிய ஒரு அடிப்படையை உருவாக்கவும், பின்னர் அந்த அடிப்படை யில் வெற்றி கொள்ளவும் முடியும். அதாவது, தான் தனது வேலைத்தல உடைமையில் எவற்றையோ, அல்லது பணத்தையோ திருடியதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டின் மீது ஒரு நியாயமான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஐயப்பாட்டை உருவாக்கி நிலை நிறுத்த முடியுமானால் அதுவே அந்த வழக்கில் வெற்றிகொள்ள அவருக்குப் போதுமானது.

ஆனால் பிழையான வேலைநீக்கம் சம்பந்தமான பிணக்கில் நிலைமை வேறு விதமானது. தொழில் வழங்குனரின் பக்கத் தில் இருந்து நோக்கும் போது அவருக்குச் சாதகத் தன்மை கூடுதலாக இருக்கின்றது. ஏனெனில், சம்பந்தப்பட்ட ஊழியர் களவைப் புரிந்தாரா என்ற காரணம் மட்டும் அங்கு உற்று நோக்கப்படுவதில்லை. வேறு சில அடிப்படைகளும் ஆராயப்படுவதே இதற்குக் காரணம்.

பிழையான வேலைநீக்கம் சம்பந்தமான பிணக்கில் அதற்குக் காரணமான திருட்டை மேற்கொண்ட ஊழியரின் நோக்கம் (intention) தான், அங்கு வழங்கப்படும் தீர்ப்பை முடிவு செய்வதற்கு முக்கிய காரணியாக அமைகிறது.

உதாரணமாக, தன்னுடன் கடமைபுரியும் இன்னொரு உத்தியோகத்தரின் மேசை லாச்சியிலிருந்து ஒரு டாலரை எடுப்பது நிச்சயமாக ஐயத்துக்கு இடமின்றி 'திருட்டு' ஆகவே கணிக்கப்படும். ஆனால் தொழில் வழங்குனரிடமிருந்து சில பென்சில்க ளையோ, பேனைகளையோ அல்லது கடதாசிகளையோ, அதன் பெறுமதி ஒரு

(27ம் பக்கம் பார்க்க)

# றொறன்ரோ மாநகரசபைகளின் தேர்தல் நவம்பர் 14; வாக்காளராக அக்டோபர் 13 வரை பதியலாம்

# Toronto Municipal Election on November 14

கனடாவில் மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல் வரிசையில், றொறன்ரோ மாநகரசபை, இதற்குட்பட்ட ஆறு நகர சபைகள், மற்றும் பாடசாலைச் சபைகளுக்கான தேர்தல் அடுத்த (நவம்பர்) மாதம் 14ம் திகதி நடைபெற வுள்ளது.

றொறன்ரோ மாநகரம் அல்லது றொறன்ரோ பெரும்பாகம் எனப்படுவது றொறன்ரோ, ஸ்காபரோ, எற்றோபிக்கோ, யோர்க் நகரம், கிழக்கு யோர்க், வடக்கு யோர்க் ஆகிய ஆறு நகரங்களை உள்ளடக்கியதாகும். இந்த ஆறு நகரங்களையும் ஆறு நகர சபைகள் நிர்வகித்து வருகின்றன. இந்த நகர சபைகளின் தலைவர்கள் மேயர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இதன் பிரகாரம் மேற்சொல்லப்பட்ட ஆறு நகரசபைகளுக்கும் ஆறு மேயர்களும், அதற்குள்ளான ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் உறுப்பினர்களாகக் கவுன்ஸிலர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். அதேபோன்று, ஆறு நகர சபைகளையும் உள்ளடக்கிய மாநகர சபைக்கும் தேர்தல் நடத்தப்படுகின்றது. இந்த மாநகரசபை றொறன்ரோ மாநகர சபை என அழைக்கப்படுகின்றது. இதற்கான தலைவரும், உறுப்பினர்களும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இந்தத் தெரிவுகள் அனைத்தும் ஒரே தினத்தில், ஒரே வாக்குச் சீட்டின் மூலம் நடத்தப்படுகின்றது. இந்த ஆண்டுத் தேர்தல் றொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் தமிழர்களைப் பொறுத்தளவில் மிகமிக முக்கியமான ஒன்றாகும். கடந்த மூன்றாண்டுகளுக்குள் பிரஜாவுரிமை பெற்ற ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் இப்பகுதியில் தற்போது வசிக்கின்றனர். இதனால் ஏராளமான தமிழர்கள் முதற்தடவையாக இந்தத் தேர்தலில் வாக்களிக்கப் போகின்றனர் எனவே இந்தத் தேர்தல் பற்றியும், வாக்களிப்பு முறை பற்றியும் அனைவரும் தெரிந்து கொள்வது நல்லது.

இலங்கையில் நடைபெறுவது போன்று இங்கு இந்தத் தேர்தல் நடைபெறுவதில்லை என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும். எங்கள் நாட்டில் உறுப்பினர்களை மட்டுமே பொதுமக்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்வர். பின்னர், வெற்றி பெற்றுச் செல்லும் உறுப்பினர்கள் தமக்குள் ஒருவரைத் தலைவராக/மேயராகத் தெரிவு செய்வதே எமது நாட்டுத் தேர்தல் வழமை. இதனால் அங்கத்தவர் கட்சி மாறுதல், பணத்துக்கு அங்கத்தவர்களைக் கொள்முதல் செய்தல் ஆகியவை தாராளமாக இடம்பெறுகின்றது. ஆனால் இங்கு நடைபெறும் உள்ளூராட் சித் தேர்தல் முறை மிகவும் வித்தியாசமானது. மாநகரசபையின் தலைவர், மாநகரசபை உறுப்பினர்கள், நகரசபைகளின் தலைவர் (மேயர்), நகர சபைகளின் உறுப்பினர்கள், அரச நிர்வாக பாடசாலைச் சபைகளின் தர்மகர்த்தாக்கள், தனியார் பாடசாலைகளின் தர்மகர்த்தாக்கள் ஆகிய அனைவரையும் தெரிவு செய்வதற்கான தேர்தல் ஒரே வாக்குச் சீட்டின் மூலமே நடத்தப்படுகின்றது.

வாக்காளர் ஒருவர் ஸ்காபரோ நகர சபையின்( City of Scarborough) ஆறாம் வட்டாரத்தில் வசிப்பவராயின், அவர் தமது வட்டார உறுப்பினராக நகர சபைக்கு ஒருவரைத் தெரிவு செய்வதற்கு வாக்களிக்கும் அதே சமயம், தமது நகர சபையின் மேயராக ஒருவரைத் தெரிவதற்கும் வாக்களிக்கின்றார். ஒரே வாக்குச் சீட்டில் நகர சபைக்குப் போட்டியிடுபவர்களின் பெயருடன், மேயர் பதவிக்குப் போட்டியிடுபவர்களின் பெயரும் இருக்கும். ஆக, இங்கு மேயரையும் மக்களே நேரடியாகத் தங்கள் வாக்கின் மூலம் தெரிகின்றனர்.

**றஞ்சி**


அதே போன்று, றொறன்ரோ மாநகர-சபைக்கான தங்கள் வட்டார உறுப்பினரையும், அதற்கான தலைவரையும் வாக்கின் மூலம் மக்களே தெரிவு செய்கின்றனர். நகர சபையின் இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களைத் தனது எல்லைப் பரப்பில் கொண்டதாக மாநகரசபையின் ஒவ்வொரு வட்டாரமும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் றொறன்ரோ மாநகரசபைக்குள்ளிருக்கும் ஆறு நகர சபைகளும் மாநகர சபை வட்டாரங்களாக வகுக்கப்பட்டுள்ளன.


மற்றொரு முக்கிய அம்சம், இந்த வாக்குச் சீட்டின் மூலம் உங்கள் வட்டார பாடசாலைச் சபை தர்மகர்த்தாவையும் நீங்கள் தெரிவு செய்கின்றீர்கள். உதாரணமாக, றொறன்ரோ நகர சபையின் (City of Toronto) ஏழாம் வட்டாரத்தில் நீங்கள் குடியிருப்பவராயின் உங்கள் வட்டார அரச நிர்வாக பாடசாலைச் சபையின் தர்மகர்த்தாவை நீங்கள் தெரிவு செய்கின்றீர்கள். நீங்கள் ஒரு கத்தோலிக்கராயின் தனியார் பாடசாலைச் சபையின் உங்கள் பகுதித் தர்மகர்த்தாவை நீங்கள் தெரிவு செய்யலாம்.

மொத்தத்தில், கனடிய பிரஜையாகவுள்ள ஒருவர், நவம்பர் 14ம் திகதித் தேர்தலுக்கு வாக்களிக்கச் செல்கையில், எல்லாமாக ஐந்து பேரைத் தெரிவதற்கு ஐந்து புள்ளடிகளை ஒரே வாக்குச் சீட்டில் இடுவார். உங்கள் நகர சபைக்கான உறுப்பினர், உங்கள் நகர சபையின் மேயர், உங்கள் மாநகர சபைக்கான உறுப்பினர், மாநகர சபையின் தலைவர், பாடசாலைச் சபைக்கான தர்மர்த்தா ஆகிய ஐவரே அவர்களாவர். சுருக்கமாகச் சொல்வதானால் உறுப்பினர்களை மட்டுமன்றி, தலைவர்கள், மேயர்களையும் மக்கள் நேரடியாகத் தெரிவு செய்யும் முறை இங்கு அமலிலுள்ளது.

இந்தத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கலாகும் இறுதி நாள் இந்த மாதம் (அக்டோபர்) 14ம் திகதியாகும். வாக்காளர் பதிவுக்கான இறுதி நாளும் அன்றைய தினமேயாகும். எனவே இந்த மாதம் 14ம் திகதி வரை பிரஜாவுரிமை பெறும் ஒருவர் மாநகர சபைக்கான வாக்காளராகப் பதிவு செய்வதற்கான விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. றொறன்ரோ பெரும்பாக ஆறு நகர சபைகளும் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளன. அந்த விபரங்கள் வருமாறு: ஸ்காபரோ நகரசபை (396-7285) : வேலை நாட்களில் 8.30 மணி முதல் 4.30 மணி வரை. அக்டோபர் 11,12,13ம் திகதிகளில் பிற்பகல் 8.30 வரை. றொறன்ரோ நகர-சபை (392-6818) : அக்டோபர் 14ம் திகதி வரை வேலை நாட்களில் பிற்பகல் 8.00 மணி வரை பதிவு செய்யலாம். எற்றோபிக்கோ நகர சபை (394-8105) : வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை. நேர நீடிப்பு நாட்கள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. வடக்கு யோர்க் நகர சபை (395-7300) : தபால் மூலம் மட்டுமே பத்திரங்களைப் பெற்றுப் பதிவு செய்யலாம். கிழக்கு யோர்க் நகரசபை (778-2014) : வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை. அக்டோபரில் 4ம்6ம் திகதிகளில் பிற்பகல் 8.30 மணி வரை திறந்திருக்கும். யோர்க் நகர சபை (394-2507) : வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை. மேலதிக விபரங்களை அந்தந்த நகரசபையுடன் மேலே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெறலாம்.

# தொழில்நுட்ப ரீதியில் கம்பியுட்டர் விற்பனைச் சேவை; 'ஹரா' தமிழ் எழுத்தும், ஆரம்ப பயிற்சியும் இலவசம்





கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களது வர்த்தக சேவையில் புதிய சகாப்த மொன்று கடந்த மாதம் உருவாகியுள்ளது. கம்பியுட்டர் விற்பனையுடன் அவற் றினைப் பொருத்துதல், தொழில்நுட்ப ரீதியிலான சேவை, பழுதுபார்த்தல் உட் பட்ட சகல வேலைகளையும் உள்ளடக்கியதாக கம்பியுநெற் இன்(f)போ சிஸ்ரம்ஸ் (CompuNet Info Systems) என்ற பெயரிலான புதிய துறையில் இளைஞர்களான பரமு ரவீந்திரனும், எஸ். சிவகுமாரும் கால்பதித்துள்ளனர்.


இந்த நிலையத்தின் உத்தியோகபூர்வமான திறப்புவிழா செப்டம்பர் 14ம் திகதி பிற்பகல் நடைபெற்றது. தொழிலதிபர்கள், சமூகப் பிரமுகர்கள், கல்விமான்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று சுமார் நூறுக்கும் அதிகமானவர்கள் இந்த வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். றிச்மன்ட்ஹில் இந்து ஆலய அறங்கா வலர் சபை, கனடா தமிழர் தேசிய மன்றம் ஆகியவற்றின் தலைவரான திரு. நா. சிவலிங்கம் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். மகாஜனா கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் குத்துவிளக்கேற்றி மங்களகரமாக ஆரம்பித்து வைத்தார்.

திறப்புவிழாவினையடுத்து சிற்றுரைகள் இடம்பெற்றன. திரு. நா. சிவலிங்கம் தலைமையிலான இந்த நிகழ்ச்சியை திரு. பரமு ரவீந்திரன் ஆரம்ப உரை யாற்றித் தொடக்கி வைத்தார். திரு. சிவலிங்கம் அவர்கள் தமது தலைமை யுரையில், தமிழர் சமூகம் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற இக்காலகட்டத்தில், சகலரும் கம்பியுட்டர் கல்வியைக் கட்டாயம் கற்றிருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

திரு. பொ. கனகசபாபதி அவர்கள் பேசுகையில், எங்கு சென்றாலும் எந்த மூலையிலும் தமிழர்கள் பல சரக்குக் கடைகளையே திறப்பதாகப் பலரும் கூறிக்கொள்ளும் இந்த நாட்களில், தமது மாணவரான ரவீந்திரன் காலத்து க்குத் தேவையான துறையில் இறங்கியுள்ளதைப் பாராட்டாதிருக்க முடியாது என்றார். திரு. எஸ். திருச்செல்வம் பேசுகையில், இவ்வாறான புதிய முயற்சி களுக்குத் தமிழர் சமூகம் போதிய ஊக்கமும் உற்சாகமும் வழங்க வேண்டும் என்று கேட்டதுடன், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியுடன் உலகம் போட்டி யிட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் மக்களின் தேவையுடன் இணைந்ததான தொழிற்றுறையில் இறங்கியிருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

முதலாவது கம்பியுட்டரை பிரபல வழக்கறிஞர் யசோ சின்னத்துரை அவர்கள், தொழிலதிபர் போர்ட்டலோ இராஜதுரை அவர்களிடமிருந்து பெற்று விற்ப னையை ஆரம்பித்து வைத்தார் நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்ட சில படங்கள் இங்கு பிரசுரமாகியுள்ளன.










# ஜனரஞ்சகமாகவும் கோலாகலமாகவும் நடைபெற்ற மூன்றாவதாண்டு தமிழர் வர்த்தகக் கண்காட்சி

கனடா-இலங்கைத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் மூன்றாவதாண்டு வர்த்தகக் கண்காட்சி கடந்த மாதம் 17 திகதி முற்பகலிலிருந்து பிற்பகல் ஒன்பது மணி வரை, ஸ்காபரோ லீக்கொக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சி மூன்றாவதாண்டாக நடைபெற்றதனால் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்கச் சற்று வித்தியாசமானதாகவும், அதிகளவிலானவர்கள் கலந்து கொண்டதாகவும் அமைந்திருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது.


ஒன்ராறியோ மாகாண அரசின் மாநகரசபை விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் திரு. எட் பிலிப்பும், மாகாண அரசின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆலோசகர் கலாநிதி ஆரி தஸநாயக்காவும் இங்கு பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர். வர்த்தக சம்மேளனத் தலைவர் திரு. கிங்ஸ்லி (பிரைட்டன்) அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற சிறப்பு வைபவத்தில் அமைச்சர் எட் பிலிப் பேசுகையில், கனடாவிலுள்ள தமிழ் வர்த்தகர்கள் குறுகிய காலத்தில் அடைந்துவரும் வளர்ச்சியை வெகுவாகப் பாராட்டினார். தமிழர் சமூகத்தின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாக கலாநிதி ஆரி தஸநாயக்கா தமதுரையில் தெரிவித்தார். சம்மேளனச் செயலாளர் திரு.ஜே. ஜெகதீஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. சிறப்பாகவும் ஜனரஞ்சகமாகவும் கோலாகலமாகவும் நடைபெற்ற இந்தக்கண்காட்சி பற்றிக் குறிப்பிட வேண்டிய சில அம்சங்கள் வருமாறு: அடுத்தடுத்து ஒவ்வொரு வருடமும் ஸ்காபரோ நகரில் மட்டுமே கண்காட்சியை நடத்தவேண்டும் என்றில்லை. ரொறன்ரோ, ஸ்காபரோ ஆகிய நகரங்களிலும் சுழற்சி முறையில் வருடா வருடம் நடத்தலாம். கூடியளவில் தமிழ் வர்த்தகர்களை அங்கத்தவர்களாக்குவதன் மூலம் பெருமளவில் தமிழ் வர்த்தக நிலையங்களைக் கண்காட்சியில் பங்குபற்றச் செய்யலாம்.

இந்த வருடக் கண்காட்சியின்போது வர்த்தக நிலையங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்ட முறையானது, நல்லூர், மடு, செல்வச் சந்நிதித் திருவிழாக்களில் கடைகள் போடுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டது போன்று நெருக்கடியாகவும் ஒழுங்கின்றியும் காணப்பட்டது. மொத்தத்தில் கண்காட்சி போலன்றி 'மகா பொல' விற்பனைச் சந்தை போன்று காணப்பட்டது. இதனை விஸ்தாரமான இடத்தில் ஒழுங்காகச் செய்வது நல்லது. அமைச்சரின் பேச்சு உட்பட்ட சகல ஆங்கிலப் பேச்சுகளுக்கும் தமிழ் மொழிபெயர்ப்பு கொடுத்திருக்க வேண்டும். சம்மேளன நிர்வாகிகளில் எவரும் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றும் களமாக இந்தக் கண்காட்சியைப் பயன்படுத்தக் கூடாது.












# கியுபெக்குவா கட்சிக்குக் கிடைத்த மாநில வெற்றி பிரிவினைக் கோரிக்கையை ஓங்கி ஒலிக்க வைக்கும்

## Quebec Provincial Election 1994 - A Review

1867 ல் கனடிய சமஷ்டி அமைப்பின் கீழ் நான்கு மாநிலங்கள் இணைந்த காலத்திலிருந்து முப்பத்தைந்து மாநிலத் தேர்தல்களை கியுபெக் சந்தித்திருக்கிறது. 1867 முதல் 1935 வரையான 19 தேர்தல்களில் பிரதான கட்சிகளான லிபரல்-கன்ஸர்வேடிவ் என்பன மோதிக் கொண்டன. 1936 முதல் 1970 வரையான பத்துத் தேர்தல்களில் லிபரலும், யுனியன் நாஷனல் என்ற கட்சியும் மோதிக் கொண்டன. 1970 முதல் 1994 வரையான காலத்தில் இடம்பெற்ற ஆறு தேர்தல்களில் லிபரலும், பார்ட்டி கியுபெக்குவா என்ற கட்சியும் மோதிக்கொண்டன.

1960ல் ஆரம்பமான அமைதிப் புரட்சியானது கியுபெக் மாநிலம் பிரெஞ்சு மக்களுக்கான தென்ற அடிப்படையில் மத்திய அரசிடமிருந்து பல உரிமைகளையும் பெற்றுக்கொள்ள வழிவகுத்தது. ஆனாலும் 1970ம் ஆண்டுகளில் தேசிய உணர்வின் வளர்ச்சியும், மத்தியில் ரூடோவின் ஆட்சியும் றெனே லவக் (Rene Levesque) போன்ற இனவாதிகளுக்குப் பார்ட்டி கியுபெக்குவாவை வளர்க்க நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கியது. 1970ல் ஏழு ஆசனங்களையும் 1973ல் ஆறு ஆசனங்களையும் பெற்ற பார்ட்டி கியுபெக்குவா 1970 நவம்பரில் நடைபெற்ற தேர்தலில், அப்போது 110 ஆசனங்களைக் கொண்ட மாநில அவையில் எழுபது ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைத்தது. தொடர்ந்து 1981 ஏப்ரல் தேர்தலில் அப்போதைய 122 ஆசனங்களில் எண்பதைப் பெற்று மீண்டும் ஆட்சியமைத்தது.

தற்போது கியுபெக் மாநில அவையின் மொத்த அங்கத்தவர் தொகை 125 ஆகி விட்டவேளையில், கடந்தமாதம் நடைபெற்ற தேர்தலில் பார்ட்டி கியுபெக்குவா 77 ஆசனங்களையும் லிபரல் கட்சி 47 ஆசனங்களையும், அக்ஷன் டெமோக்கிரட்டிக் (A.D) கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன. மிகவும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் முடிவுகள் ஏதோ ஒரு வகையில் 'சப்'பென்று தான் இருந்தன. ஜக் பரிஸோ தலைமையிலான பார்ட்டி கியுபெக்குவா அதிக எண்ணிக்கையளவில் ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்கின்றபோதிலும் எதிர்பார்த்த வாக்குகள் அதற்குக் கிடைக்கவில்லை. டானியல் ஜோன்ஸன் தலைமையில் தோல்வியைத் தழுவிக் கொண்ட லிபரல் கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் தோல்வியிலும் திருப்தியான சிறு வெற்றியை வழங்கியுள்ளது.

லிபரல் கட்சியின் இளைஞர் தலைவராகவிருந்த மரியோ டுமன் (Mario Dumont) 1992ல் அக்கட்சியை விட்டுப் பிரிந்து ஆரம்பித்ததுதான் அக்ஷன் டெமோக்கிரட்டிக் என்ற கட்சி. 24 வயது இளைஞரான இவர் கியுபெக் சிற்றியிலிருந்து 200 கிலோ மீட்டர் கிழக்கிலுள்ள 'றிவியர் து லு' என்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். இவரது கட்சியும் பிரிவினை விடயத்தில் பார்ட்டி கியுபெக்குவாக்குக் குறைந்ததல்ல. 6.6 வீத வாக்குகளை எண்பது தொகுதிகளில் இது பெற்றுள்ளது.

1989ம் ஆண்டுத் தேர்தலில் நான்கு ஆசனங்களைப் பெற்ற 'ஈக்குவல்' கட்சி இம்முறை எந்தத் தொகுதியையும் கைப்பற்றவில்லை. எனினும் கனடாக் கட்சி, கம்யுனிஸ்ட் கட்சி, கிறீன் கட்சி, மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி, லெமன் கட்சி என்ற வரிசையில் பதினைந்து கட்சிகள் தோல்வியைத் தழுவிக் கொண்டன.


**நோக்கு: கியுபெக் மாநில தேர்தல்-1994**

**கே.ரி. சண்முகராஜா**


1994ம் ஆண்டுத் தேர்தல் குறிப்பாக கியுபெக்கின் இறைமையை வலியுறுத்தியதுடன் கியுபெக் பிரிவினை பற்றிய பிரசாரங்களே முன்னணி வகித்ததால் இத்தேர்தல் முடிவுகள் பற்றிப் பார்க்கும் போது அவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளது. 1993ல் நடைபெற்ற கனடிய பொதுத் தேர்தலில் 'புளொக்' கியுபெக்குவா கட்சி 53க்கு மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றி, மத்திய அரசில் ஒரு மாநிலக் கட்சி எதிர்க் கட்சியாகும் நிலைமையைத் தோற்றுவித்தது. இந்த வெற்றியின் பிரதிபலிப்புகள் கடந்த மாத மாநிலத் தேர்தலில் எதிரொலிக்காமல் இல்லை.

மத்தியில் எதிர்க்கட்சித் தலைவராகவிருக்கும் திரு. லூஷியன் பூஷாட் முழுமையான பங்களிப்பைச் செய்யும் விதத்தில் செய்து பிரிவினைக் கட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றுள்ளார். கியுபெக் மாநிலத்தில் ஆட்சியிலும், மத்திய அரசில் எதிர்க்கட்சித் தலைமையுடனும் பிரிவினைக்கட்சி இருப்பதனால் வரப்போகும் காலங்களில் பிரிவினைக் குரல் ஓங்கி ஒலிக்க இடமுண்டு.

எனினும், 1995ல் நடைபெறவிருக்கும் சம்மத வாக்கெடுப்பு (Referundum) இவர்களுக்கு ஒரு சவாலாக அமையலாம். ஏனெனில் கடந்த மாதத் தேர்தல் பார்ட்டி கியுபெக்குவாவைப் பொறுத்தளவில் பெரிய மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை. மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 44.7 வீதத்தினை மட்டுமே அவர்கள் பெற்றுள்ளனர். 44.3 வாக்குகளை லிபரல் கட்சி பெற்றுள்ளது. ஆக 0.3 வாக்குகள் மட்டுமே அதிகப்படியாகக் கிடைத்தன. இதுதவிர உதிரிக்கட்சிகள், சுயேச்சைகள் பெற்ற வாக்குகளும் சம்மத வாக்கெடுப்பின்போது பிளவுபடலாம். ஆகவே சம்மத வாக்கெடுப்பில் வெற்றிபெறுவதற்கு ஜக் பரிஸோ மிகக் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. அதேசமயம், அவர்களைத் தோற்கடிப்பதற்கு டானியல் ஜோன்ஸன் மேலும் கடுமையாக உழைக்க வேண்டும். லிபரல் கட்சியைப் பொறுத்தவரை மொன்றியல் தீவு, வெஸ்ற் ஐலன்ட் ஆகிய பகுதிகளில் மகத்தான வெற்றியைப் பெற்று, விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற நிலையிலுள்ளது. அதேசமயம் 1980ல் நடத்தப்பட்ட சம்மத வாக்கெடுப்புத் தேர்தலும் கியுபெக்குவாவுக்கு வெற்றியை வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், மக்கள் சம்மதம் கிடைத்தால் என்ன, கிடைக்காவிட்டாலென்ன Quebec is a one way road to independence என்ற பார்ட்டி கியுபெக்குவாவின் கொள்கை, ஜனநரயகத்தின் பாரம்பரியங்களைக் குழிதோண்டிப் புதைப்பதாகும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. ஜக் பரிஸோவின் திட்டப்படி பல்வேறு அதிகாரங்களை ஒட்டாவா கியுபெக்குக்குக் கையளிக்கத் தயாராக வேண்டும். கனடாவின் துண்டுவிழும் தொகையான 550 பில்லியன் டாலர்களைப் பிரித்துத் தமக்கு அறிவிக்க வேண்டும்; மனிதவளப் பயிற்சி பூரணமாக கியுபெக்குக்கு வழங்க வேண்டும். இவைகளை ஒட்டாவா செய்யத் தவறும் பட்சத்தில் பரிஸோ ஒட்டாவா மீது குற்றங்காண்பார்.

அதைத் தொடர்ந்து கியுபெக்குக்கான அரசியலமைப்பை வரைய அரசியலமைப்பு கமிஷன் நியமிக்கப்படும். 1985 ஜுன் மாதத்தில் சம்மத வாக்கெடுப்பு என அறிவிக்கப்பட்ட போதிலும் பரிஸோ அதனை மேலும் தாமதித்து அதற்குள் தனது ஆதரவைக் கூட்டலாம். ஜக் பரிஸோ ஒரு கொள்கை நிர்ணயம் செய்யும் திறமைசாலியாக இருப்பதுடன் தனது வேலைத் திட்டங்கள், தந்திரோபாயங்களில் அளவற்ற தன்னம்பிக்கை உடையவர். ஒக்ஸ்போர்ட்டில் கல்விகற்ற ஆங்கிலத்தில்

( 27ம் பக்கம் பார்க்க)

# கனடாவில் வனவிலங்குகளின் சுதந்திரப் பூங்கா
# உல்லாசப் பயணிகளுக்கு இது ஒரு சிறைக்கூடம்
# African Lion Safari - A different Zoo

வசந்தகாலப் பொழுதுபோக்கு இடங்களில் ஒன்றாகவும், உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாகவும், கல்விச் சுற்றுலா இடமாகவும், எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கைச் சூழலுடன் வாழ்ந்து வரும் வனவிலங்குகளின் சுதந்திரப் பூங்கா வாகவும் 'ஆபிரிக்கன் லயன் சபா(F)ரி' (African Lion Safari) விளங்குகின்றது.

இந்த வனவிலங்குச் சோலை பல்வேறு சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண் டுள்ளது. மனிதனும் வனவிலங்குகளும் இயற்கையுடன் உறவாடி விளையாடும ஒரு அற்புதமான இடம். மனிதனுக்கு உயிரா பத்து விளைவிக்கக்கூடிய பயங்கரமான விலங்கினங்கள் முதல், அவனோடு ஒட்டி உறவாடி மகிழும் விலங்கினம் மற்றும் பறவைகள் வரை ஒன்றுகூடி வாழும் இடம். உலகின் ஐந்து கண்டங்களிலும் வாழும் விலங்கினங்கள் ஒன்றிணைந்து வாழுமிடம்.

வெப்பம், மழை, பனி, குளிர், போன்ற வேறுபட்ட காலநிலைகளிலும், காடு, மேடு, மலை, நிலம், புற்றரை போன்ற வேறுபட்ட இயற்கை அமைப்பிலும் வாழும் வனவிலங் குகள் ஒன்றாகச் சங்கமித்திருக்கும் ஓர் பல்லின விலங்குச் சோலை இது. இவை அனைத்துக்கும் மேலாக முற்றிலும் மாறுபட்ட வகையில் இவ்வனைத்து விலங்குகளும் சுதந்திரமாகத் திரிய இங்கு செல்லும் மனிதன் சிறை கொண்டிருக்கும் விசித்திரமான இடம் இது.

இந்த வனவிலங்குச் சோலை ஒன்ராறியோ மாகாணத்தில் Flamborough நகரசபைப் பிரிவில் அமைந்துள்ளது. ரொறன்ரோ நகரிலிருந்து ஏறக்குறைய ஒன்றரை மணி நேரத்தில் இங்கு சென்றடைய முடியும். கனடாவிலேயே முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமன்றி, முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட வனவிலங்குச் சோலையும் இதுதான். ஏறத்தாழ 29 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட இந்த வனவிலங்குச் சோலை 1969ம் ஆண்டு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. தற்போது இது தனது 25வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடி வருகின்றது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 50 விலங்குகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சோலை தற்போது 1700க்கும் மேற்பட்ட விலங்குகளையும், 300க்கும் மேற்பட்ட பறவைகளையும் கொண்டுள்ளது. கனடாவில் 28 வருடங்கள் இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்ற, காலஞ்சென்ற G.D.Dailley என்பவர் இதனைத் தமது ஓய்வுகாலத்துப் பொழுது போக்கு நிகழ்ச்சியாக ஆரம்பித்தார் என்று கூறப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அக்டோபர் மாதம் முப்பதாம் திகதி வரை இந்த வனவிலங்குச் சோலை உல்லாசப் பிரயாணிகள் பார்வை யிடுவதற்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கும். குறிப்பாக அக்டோபர் மாதத்தில் வார நாட்களில் காலை பத்து மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரையும் திறக்கப்பட் டிருக்கும்.

பிரவேசக் கட்டணமாக வயது வந்தவர்களு க்கு 13 டாலர் 95 சதமும், 13 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் (முதிய வர்கள்) 11 டாலர் 95 சதமும், 3 வயதுக்கும் 12 வயதுக்குமிடைப்பட்டவர் களுக்கு 9 டாலர் 95 சதமும் அறவிடப்படும்.

இந்தச் சோலையைச் சுற்றி வந்து விலங்கு களைப் பார்வையிடுவதற்கு மோட்டார் வண்டியைப் பயன்படுத்த முடியும்.

**வித்தியா**

வழிகாட்டி விளக்கங்களுடன் கூடிய குளிரூட்டப்பட்டஉல்லாசப் பிரயாண பஸ் வண்டிச் சேவையும் உண்டு. இந்த பஸ் வண்டிச் சேவையைப் பயன்படுத்த விரும்பு பவர்கள் மேலதிக கட்டணம் செலுத்த வேண்டும். இதற்கான கட்டண விபரம் வருமாறு: வயது வந்தவர்கள் 4 டாலர் 50 சதம்; 13 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்டவர்களும், 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் 4 டாலர், 3 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 3 டாலர் 50 சதம்.

இந்தச் சோலையைச் சுற்றிப் பார்ப்பதற்குச் சொந்த வாகனங்களில் செல்வது அவ்வளவு உசிதமானதல்ல. குறிப்பாக வானரங்கள் (குரங்குகள்) வாகனங்களைச் சேதப்படுத்தச் சந்தர்ப்பம் உண்டு. எனவே வாகனங்களை வாடகைக்கு அமர்த்திச் செல்வது புத்திசாலித்தனமானது. மோட்டார் வண்டியை வாடகைக்கு அமர்த்தும் பொழுது அதனைக் காப்புறுதி செய்வதும், பூச்சியக் (Zero) கழிவில் பெற்றுக் கொள் வதும் அவசியமாகும். இல்லாவிடில் சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற் பணம் என்றவாறு அமைந்தாலும் ஆச்சரியப்பட இடமில்லை. பூச்சிய கழிவுக் காப்புறுதியுடன் மோட்டார் வண்டியை வாடகைக்கு விடும் பல நிலையங்கள் ரொறன்ரோ நகரில் உண்டு.

உல்லாசப் பிரயாணிகளின் நன்மை கருதி யும் தேவை குறித்தும் பல பாதுகாப்பு முன்னேற்பாடுகளை வனவிலங்குச் சோலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. தனியார் வாகனங்களில் செல்பவர்களின் வசதிக்காக இலவச வாகன தரிப்பிட வசதி உண்டு. மற்றும் உணவகம், இளைப்பாறும் கூடம், பரிசுப் பொருட்களின் விற்பனை நிலையம் (Gift Shop), வங்கி, எரிபொருள் நிலையம் என்பனவும் இங்குண்டு.

பயங்கரமான விலங்குகள் வாழும் பகுதிக்கு ஊடாக வாகனங்கள் செல்லும் போது வாகனங்களின் யன்னல்கள் மூடப் பட்டிருக்க வேண்டும் என்பது பாதுகாப்புக் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை களில் ஒன்றாகும். இது மிகக் கட்டாயமாக அமல் செய்யப்படுகின்றது. பயணிகள் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றுகின்றனரா என்பதைக் கண்காணிக்க தனியான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள் ளனர். விலங்குகளுக்கு உணவுப் பொருட்கள் கொடுப்பதும் குற்றமாகும். தனியார் வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பேற்க மாட்டாது என்பது அதன் பிரதான விதிகளில் ஒன்றாகும்.

இந்த வனவிலங்குச் சோலையின் மறு கரையில் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை பார்த்தும் பங்குபற்றியும் மகிழ்ச்சி அடையக்கூடிய பத்தொன்பதுக்கும் அதிகமான நிகழ்ச்சிகள் தினமும் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். குறிப்பாகத் தினசரி மூன்று வேளைகள் இடம்பெற்றுவரும் குதிரைகள், யானை களின் சாகஸ விளையாட்டுகள், கழுகு பருந்து ஆகிய பறவைகளின் சாகஸ விளையாட்டுகள் மகிழ்ச்சியை மட்டுமன்றி, வியப்பையும் அதிசயத்தையும் உண்டு பண்ணுகின்றன.

சாகஸ விளையாட்டின்போது கண்ணுக் கெட்டாத தூரம் வரை சுதந்திரமாகப் பறந்துவிட்டு மீண்டும் அவ்விடம் திரும்பி வரும் கழுகு, பருந்து ஆகியவற்றைக் கண்டு களிக்காதிருக்க முடியாது. இந்த நிகழ்ச்சிகள் இலையுதிர், இலைதுளிர் காலங்களில் வானிலை சீராக இல்லா தவிடத்து ரத்துச் செய்யப்படலாம்.

( 27ம் பக்கம் பார்க்க)


Call Now
LOW COST
CARPET & INTERIOR'S
Warehouse
CARPET
CERAMIC TILES
HARD WOOD FLOOR
THERMAL WINDOWS
DOORS
SOFA
ITALIAN SOFA
BED ROOM SET
MATTRESS, DRAPERIES
VERTICAL BLINDS
VENETIAN BLINDS
You paint Your Apartment wall with PARA Paints from $50
PARA paints
Basement Loop Carpet from 40¢/ Sq feet
உரிமையாளர்: சபேசன் காங்கேசு
Tel: (416) 605 1990
721A Progress Ave. Scarborough

**Employment Equity Commission**

Ontario

# தொழிலிடங்களில் சமத்துவம் ஒவ்வொருவரும் சம்பந்தப்பட்டது

*ஒன்ராறியோவின் தொழில் சமத்துவ சட்டம்*
*1994 செப்டம்பர் முதலாம் திகதி முதல் அமுலாகிறது.*

தொழில் சமத்துவம் ஒவ்வொருவருக்கும் நியாயமானதும்
சமத்துவமானதுமான தொழிலிடங்களை

★ தடைகளையும் பாரபட்சத்தையும் அகற்றுவதன் மூலமும்
★ஆதிக்குடிகள், அங்கவீனர்கள், இனரீதியான சிறுபான்மையினர்,
பெண்கள் ஆகியோருக்கு தொழில் வாய்ப்புக்கான சமத்துவ வசதிகளை
வழங்குவதுடன் முழு பங்களிப்பையும் வழங்க வழிவகுப்பதன் மூலமும்
உருவாக்குகிறது.

இந்த சட்டத்தை அமுலாக்குவதில் தொழிலாளர்கள்
முக்கிய பங்காற்றுகிறார்கள்.

தொழில் வழங்குனர்கள், பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பொதுமக்களின்
பிரதிநிதிகள், விரிவான பொது, தனியார் துறைகள் போன்றன தங்கள்
ஆரம்ப தொழில் வாய்ப்பு சமத்துவ திட்டங்களை தயார் செய்ய
12 முதல் 36 மாதங்கள் வரை உண்டு.

உங்கள் பங்கு, சட்டம், வேலைவாய்ப்பு சமத்துவ ஆணைக்குழு வழங்கும்
தகவல்கள், சேவைகள் பற்றிய மேலதிக விபரங்களை அறிய,
எங்கள் தகவல் தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
ரொறன்ரோவில் ; (416) 314-0016
ரொறன்ரோவுக்கு வெளியே ; 1-800-567-0356
செவிப்புலன் இழந்தோருக்கு ரொறன்ரோவில் ; (416) 314-0011
ரொறன்ரோவுக்கு வெளியே ; 1-800-663-2534
அல்லது பின்வரும் முகவரிக்கு எழுதுங்கள்
Employment Equity Commission,
10th Floor, 77 Bloor Street West
Toronto, Ontario, M7A 2R9

# யசோ சின்னத்துரை

கனடிய பாரிஸ்டர், சொலிஸிற்றர் & நொத்தாரிசு

* குடிவரவு அகதி விசாரணை (புதிய மனிதாபிமான மேன்முறையீடு பிரதிநிதித்துவம், மீளாய்வு ஆகியன உட்பட).
* வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை, ஈடுவைப்பு/மீட்டல்.
* குடும்ப விவகாரச் சட்ட உதவி, பிரதிநிதித்துவம்.
* அதிகாரக் கையளிப்பு (Power of Attorney)
  இறுதி விருப்ப ஆவணம் (Last Will)
* இலங்கையில் நடைபெறவேண்டிய சட்டத் தேவைகளுக்கு ஆலோசனை.
  பிரதிநிதித்துவ பொதுத் தொடர்பு.
  இத்தகைய பிரதிநிதித்துவமும், மற்றும் பொதுத் தேவைகளுக்கான சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்.
  சட்ட உதவிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## Yaso Sinnadurai

Barrister & Solicitor, Notary Public (Ontario)

* Immigration & Refugee Law (Including Federal court Appeals, Inquiries, Detention Reviews, Humanitarian and Compassionate submissions under the **new regulations** to be implemented for rejected refugee claimants.)
* Purchase and sale of Residential and Commercial Properties, Registration of Mortgages.
* Family Law (Limited to uncontested divorce and separation agreements.)
* Last will/ Power of Attorney.
* Consultation on legal issues arising from transactions in SriLanka.

2 Carlton Street, Suite 1704, Toronto, Ontario M5B 1J3
(College Subway)
**Telephone:(416) 977-1071 Fax: (416) 977-9794**

# COLOUR AND BLACK & WHITE

Professional Photography

## P. Anna Devan

Qualified Photographer in Canada.

Weddings, Birthdays, Family Portraits, Copy Works etc.

Call for your needs & advice:


**Tel: (416) 921 - 9743**

"Quality & Service is a pleasure"

# இளம் தமிழ்க்கலைஞர்கள் தயாரித்த 'நிலாத் தென்றல்' இசைத்தட்டு

கனடாவில் வாழும் இளம் தமிழ்க் கலைஞர்களின் ஆர்வம் கலந்த தயாரிப்பிலான தீந்தமிழ் இசைத்தட்டு வெளியீடு ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் ஸ்காபரோவிலுள்ள உணவகமொன்றில் நடைபெற்றது.

'நிலாத் தென்றல்' என்ற பெயரிலான இந்த இசைத் தட்டினை ஸ்வராலயம் மியுஸிக் ஸ்தாபனத்தினர் தங்களது கன்னி வெளியீடாக வெளிக்கொணர்ந்திருந்தனர். அடக்கமாக நடைபெற்ற இதன் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு, சிறந்த தமிழ்ப் பேச்சாளரும் இசை ஆர்வலருமான இலங்கைச் சட்டத்தரணி திரு. தம்பையா ஸ்ரீபதி அவர்கள் தலைமை தாங்கினார்.



'தமிழர்கள் தங்கள் சொத்து சுகங்களை, தங்களின் வீடு வாசல்களை, தங்களின் உற்றம் சுற்றத்தை விட்டு அகதிகளாக வேற்று நாடுகளில் குடிபுக நேர்ந்த வேளையிலும், அவர்கள் தங்களின் கலாசார பாரம்பரிய பண்பாடுகளைத் தம்முடன் கொண்டுவரத் தவறவில்லை. கடல் கடந்து அவர்கள் எங்குதான் குடியேற நேர்ந்த வேளையிலும் அங்கெல்லாம் தங்களின் கலை, கலாசாரங்களைப் பேணி வளர்த்து வருகின்றனர். இந்த வகையில் கனடாத் தமிழர்கள் முன்னணி வகிக்கின்றனர்' என்று அவர் தமது தலைமையுரையில் தெரிவித்தார்.

சங்கமம் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் இளையபாரதி அவர்கள் சிறப்புரையாற்றுகையில், தமிழீழத்தில் நிலாவறையில் வாழ்ந்து கழித்த ஈழத்தமிழர் இன்று நிலவறையில் வசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதனை நினைவுகூரும் வகையில் 'நிலாத் தென்றல்' இசைத்தட்டு வெளியீடு கனடாவில் நிலவறையில் நடைபெறுவது ஓரளவு பொருத்தமானது என்று சொன்னதுடன், இளங்கலைஞர்களின் இவ்வாறான முயற்சிகளுக்கு இங்குள்ள தமிழர்களின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் முக்கியம் கொடுத்து ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

அரசியல் பிரமுகர் திரு. பிராட், தமிழிசைக் கலா மன்றத் திருவர் திரு. வை. சொர்ண லிங்கம், பல்கலைக் கழக மாணவி தர்ஷினி குமாரசாமி ஆகியோரும் உரையாற்றினர். இசைத்தட்டின் முதற் பிரதியை ஈ. எஸ். கே. ஜுவலரி அதிபர் திரு. ராஜா பெற்றுக்கொண்டார்.

யாழ்வாணன், இசை தாஸன் ஆகியோரால் எழுதப்பட்ட பாடல்களை, ஈழத்தின் புகழ்பெற்ற கவிஞரும் பல்கலை வேந்தருமான சில்லையூர் செல்வராஜனின் புதல்வர் பாஸ்கரன் செல்வராஜன், இசை தாசன், பிரிந்தா தவக்குமார், டான் போப் போவிச் ஆகியோர் பாடியிருந்தனர். இசை தாசன் அவர்கள் பாடல்களுக்கு இசையமைத்திருந்தார்.

இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்ச்சியின்போது சங்கமம் இளையபாரதி அவர்கள் உரையாற்ற திரு. தம்பையா ஸ்ரீபதி அருகில் அமர்ந்திருப்பதையும், இசைத்தட்டின் முதற்பிரதியை ஈ. எஸ். கே ஜுவலரி அதிபர் திரு. ராஜா அவர்கள் இசைதாசனிடமிருந்து பெறுவதையும், 'நிலாத் தென்றல்' கலைஞர்கள் கூட்டாக நிற்பதையும் இங்குள்ள படங்களில் காணலாம்.





## றிச்மன்ட்ஹில் இந்து ஆலய இந்தமாத உற்சவங்கள்

றிச்மன்ட்ஹில் இந்து ஆலய இந்த மாத முக்கிய உற்சவங்களின் விபரங்கள் வருமாறு:

01 சனி: புரட்டாதிச் சனி (3)
02 ஞாயிறு: பிரதோஷம்
05 புதன்: நவராத்திரி விரதாரம்பம்
08 சனி: : புரட்டாதிச் சனி (4)
09 ஞாயிறு: சஷ்டி அபிஷேகம்.
12 புதன்: வாழை வெட்டு விழா
13 வியாழன்: விஜய தசமி,
ஏடு தொடக்குதல்,
கேதார கௌரி விரதம் தொடக்கம்
15 சனி: புரட்டாதிச் சனி (5)
16 ஞாயிறு: பிரதோஷம்
21 வெள்ளி: ஐப்பசி வெள்ளி (1)
28 வெள்ளி: ஐப்பசி வெள்ளி (2)
31 திங்கள்: பிரதோஷம்

## விஜய தசமியும் ஏடு தொடக்குதலும் இந்த மாதம் 13ம் திகதி

றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம், துர்க்கை அம்மன் கோவில், கந்தசாமி கோவில் ஆகிய ஆலயங்கள் உட்பட இங்குள்ள சகல இடங்களிலும் இந்த மாதம் 13ம் திகதி வியாழக்கிழமை விஜய தசமியும், பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதலும் இடம்பெறுகின்றது.

## கந்தர் சஷ்டி நவம்பர் 4ல் ஆரம்பம்

இந்துக்களின் பிரதான விரதங்களில் ஒன்றான கந்தர் சஷ்டி விரதம் நவம்பர் மாதம் நான்காம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

## கவிஞர் கந்தவனம் மணிவிழா பூர்த்தி நிகழ்ச்சி மொன்றியலில்

கவிஞர் கந்தவனம் அவர்களின் மணி விழாவின் பூர்த்தி நிகழச்சிகள் நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி மொன்றியலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கவிஞர் கவிராஜன், கே.ரி.சண்முகராஜா, திருமாவளவன், எஸ். ஏ. சிவபாதம் ஆகியோரை உள்ளடக்கிய பிரமுகர்கள் குழுவொன்று இந்த விழாவை வெற்றி விழாவாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. மேலதிக விபரங்கள் பெற விரும்புபவர்கள் 1-514-747-5731 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

534-0011



534-0011

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகள் சேவைக்கும், திருமணத்திற்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

மண்டபம் - முத்துமணவறை - மண்டப அலங்காரம் - பூமாலை - சடைநாகம் - - தலைப்பாகை - தலைநகை - பூசைப் பொருட்கள் - சைவ உணவு அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கு எம்மை நாடுங்கள்.

றொறன்ரோ, ஸ்காபரோ நகரங்களில் கார் நிறுத்தும் வசதியுடன் திருமண மண்டப ஒழுங்குகளை நாங்களே செய்து தருகின்றோம்.

இந்துமத குரு, கனடிய திருமண பதிவு அதிகாரி

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்

( HINDU PRIEST & REGISTAR) புங்குடுதீவு -10, இலங்கை

243 MARGUERETTA ST.,
TORONTO, ONT. M6H 3S4
T.PHONE: 534-0011

1247 ELLESMERE ROAD
SCARBOROUGH, ONT. M1P 2X8
T.PHONE: 750-7319

## உங்கள் வசதி கருதி தற்போது இரண்டு இடங்களில் சேவை

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கனடாவிலும்
மொத்தம் இருபது ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில் அனுபவம் பெற்ற
உங்கள் நம்பிக்கைக்குரிய

# டாக்டர் அ. சண்முகவடிவேல்

### குடும்ப பல் வைத்தியர்

செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்
2466 Eglinton Avenue East, Unit: 7, Scarborough, Ont. M1K 5J8
Opposite Kennedy Subway ( Rainbow Village கட்டடத்தில் )

**(416) 266-5161**

திங்கள், புதன் கிழமைகளில்
Main Square Dental Centre 2575 Danforth Avenue, Toronto, Ontario. M4C 1L5
(416) 690-0176

# மு. காசிப்பிள்ளை
## ச க புத்திரர்கள்

### கனடிய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற துரித பணமாற்றுச்சேவை நிறுவனம்

37 வருட வர்த்தக அனுபவம்

1958ல் இருந்து வர்த்தகத்துறையில் முன்னோடிகளாகத் திகழும் எமது ஸ்தாபனத்துடன் உங்கள் பணமாற்றுச் சேவையை வைத்துக் கொள்ளுங்கள்! பலன் பெறுங்கள்!!
எமது சேவையில் இதுவரை பூரண திருப்தி கண்டு எம் தமிழ் மக்கள் மகிழ்ச்சி கொண்டுள்ளார்கள் இது எமக்கு மிகுந்த பெருமிதத்தைத் தருகிறது.

*** வவுனியா * மட்டக்களப்பு * சிலாபம் * நீர்கொழும்பு * கொழும்பு (சுற்றுப்புறங்கள்) * சென்னை * சிங்கப்பூர்**

ஆகிய இடங்களுக்கு துரித பணமாற்றுச் சேவை
**கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா**

# M. KASIPPILLAI AND SONS INC

**3228 Eglinton Ave. East, #3, Scarborough, Ont. M1J 2H6**

**Tel: (416) 267-8221**


# கவிதாஸ் KAVITHAS INC.

உலகனைத்துக்குமான துரித பணமாற்றுச் சேவை
(இலங்கை, தென்னிந்தியா உட்பட சகல பகுதிகளுக்கும் விசேட சேவை)
மற்றும் பாக்ஸ், பார்ஸல் சேவை

**WORLDWIDE MONEY TRANSFER FAX & COURIER SERVICE**

தாயகத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் நண்பர்கள் உறவினர்களுக்கு ஒரு சில நேரத்தில் பணம் சென்றடைய உத்தரவாதமும், நம்பிக்கையுமுள்ள ஸ்தாபனம். மொன்றியல், மிஸிஸாகா, வன்கூவர், அல்பேர்ட்டா நகரங்களில் வசிப்பவர்களுக்கும் பணம் அனுப்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பிரசித்திபெற்ற இந்திய சுமீத் மிக்ஸியை நேரடியாக எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



கவிதாஸ்
1241 Ellesmere Road,
Scarborough, Ont. M1P 2X8
Tel: (416) 755-6560 (416) 750-1983

ஓம் ஸ்ரீ சாயிராம்

# Health Foods Herbal Clinic

## ஆரோக்கிய உணவுமூலிகை மருத்துவ நிலையம்

*எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட கீழ்க்கண்ட எண்ணெய்கள் கிடைக்கும்:*

* கூந்தல் வளர்ச்சித் தைலம்
* வாத நோவெண்ணெய்
* கஸ்தூரி கோரோசனை மாத்திரை
* பீனிசத் தைலம்
* முக்கூட்டுக் குளிகை
* கிரந்தி எண்ணெய்,
* கடுக்காய்க் குளிகை
* பொடுகுத் தைலம்
* சருமத் தைலம்
* பேறுகால சரக்குத்தூள்

நாட்பட்ட சகல நோய்களுக்கும் இயற்கைமுறை மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்.
மகப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு விசேடமான மூலிகை முறைகள் உண்டு.

**கம்பியூட்டர் ஜாதகம்!**

கம்பியூட்டர் முறையில் தமிழில் ஜாதகம் பத்து நிமிடங்களுக்குள், கணித முறையிலோ வாக்கிய முறையிலோ கணித்துக் கொடுக்கப்படும்.

* எண்கணிதம் * ஜோதிடம் * கைரேகை * திருமணப் பொருத்தம் * பெயரிடுதல் * பெயர் மாற்றம் * கிரகதோஷ பரிகாரம் முதலிய பிரச்சனைகளுக்குப் 'பெண்டுல' சுழற்சியின் மூலம் துல்லியமான, அச்சொட்டான பலாபலன்கள் ஆராய்ந்து கூறப்படும்.

For Appointment Please call:

*Director & Counsellor*
**Prof. Dr. (Ms) A. Ganesaal**

10 Sunny Glenway
# 307, Donmills
Ontario. M3C 2Z3

**Tel: (416) 467-6393**
**Fax: (416) 467-7270**

## பாடசாலையை விட்டு

(12ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பாடசாலையிலே ஒரே தடவையில் சமாந்தரமாக இரண்டுக்கு மேற்பட்ட சுவடுகள் நடைபெறும். ஒவ்வொரு சுவட்டுக்கும் வெவ் வேறு காலங்களில் விடுமுறை இருக்கும். உதாரணமாக, 4 சுவடுகள் உள்ள ஒரு பாட சாலையில் ஒரே சமயத்தில் மூன்று சுவட்டு மாணவர்கள் மாத்திரமே இருப்பர். இதனால் பாடசாலையில் இடப்பிரச்சனை, தளபாடப் பிரச்சனை ஆகியன பெருமளவிலே தீர்க்கப்பட லாமெனக் கருதப்படுகின்றது.

சென்ற சில வருடங்களாக பெரும் அளவினிலே வேறு பல நாடுகளிலிருந்து இங்கு வந்து மக்கள் குடியேறியமையால் பாடசாலைகளிலே மாணவர் தொகை பெருமளவினிலே அதிகரித்து ள்ளது. இதனால் பல பாடசாலைகளில் போதிய வகுப்பறைகள் இல்லாததால் தற்காலிக வகுப் பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை நிரந்தர மாகுவதற்குப் போதிய நிரந்தர வசதியின்மை யால் ஓர் மாற்றுத் திட்டத்தனாலான புதிய சிந்த னையே இந்த முழுவருடக் கல்விமுறை. இங்கு மாணவரின் கல்வி மேம்பாட்டிலும் பார்க்க பொருளாதார வசதிக்கே முன்னுரிமை தரப்ப ட்டது. ஒன்ராறியோவிலுள்ள லண்டன் கல்விச் சபை இத்தகைய முறையினைப் பரீட்சார்த்த மாக 1966ம் ஆண்டிலே சில பாடசாலைகளிலே நடைமுறைப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. ஒன்ராறியோ மாகாண கல்வி அமைச்சர் டேவிட் குக் அவர்கள் இத்தகைய திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க முனையும் கல்விச் சபைக்கு தனது பரிபூரண ஆதரவுண்டு என அறிவித்துள்ளார். சில கல்விச் சபைகள் தமக்கு அத்தகைய திட்டம் இல்லை என அறிவித்து ள்ள போதிலும் இலண்டன் கல்விச் சபையின் முயற்சி வெற்றி பெறுமாயின் அவர்களையும் இந்த மார்க்கத்திலே சிந்திக்க வைக்கும். மேலும் தொடர்ந்து தற்காலிக வகுப்பறைகள் நிறுவிக்கொண்டு போனால் அதற்கு முடிவு எங்கே?

எனவே யதார்த்த ரீதியிலே கல்விச் சபைகள் சிந்திக்கத் தொடங்கினால் முழு வருடப் பாட-சாலைகளை விரைவினிலே எங்கும் காண முடியும். நீண்ட விடுமுறை கிடைக்க முடியாது. குடும்பத்தவர் எல்லோருக்கும் ஒரே சமயத்தில் விடுமுறை கிடைக்க மாட்டாது. விடுமுறைக் கால வகுப்புகளிலே கல்விகற்று சிறப்புச் சித்தி கள் பெறமுடியாது என்று காரணம் கூறலாம். முக்கியமான இரண்டு விடயங்களை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். பெரும்பாலான பிள்ளைகள் இரண்டுமாத விடுமுறையின்போது கொஞ்சம்கூடக் கல்வி கற்பதில் அக்கறை காட்டுவதில்லை. வகுப்பேற்றப்பட்ட பின்னர் விடுமுறை விடப்பட்டதனால் படிப்பதற்கொன் றுமே இல்லை என்பார்கள். எனவே பாட-சாலை மீண்டும் ஆரம்பமாகியதும் கணிச மான காலம் முன்பு கற்றதை மீட்டுவதில் செலவாகிவிடுகிறது. இரண்டாவது- கோடை கால வகுப்புகளிலும் மாலை நேர வகுப்புக ளிலும் கல்வி கற்று விசேட சித்திகள் பெறுவது. அவ்வகுப்புகளிலே பெறுகின்ற சித்திகளை வழமையான பாடசாலைச் சித்திகளுடன் அதீத கற்பனையோடு ஒப்பிடுதல் முறையற்றது.

## திருட்டு வழக்கில்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

டாலருக்குக் கூடுதலாக இருந்தாலும்கூட, ஒரு ஊழியர் அதனைத் தமது வீட்டுக்கு எடுத்துச் செல்லும் பட்சத்திலும் அதனைத் 'திருட்டு' எனக் கொள்ளமுடியாது போகலாம். இங்குள்ள பிரச்சனை என்னவெனில், முதலாவதாக- தொழிலக பொருட்களை எடுக்கின்ற ஊழியரின் உண்மையான நோக்கம் என்ன என்பதும், இரண்டாவதாக- தொழில் வழங்குனர் இப்படி யான பொருட்களை எடுத்துச் செல்ல ஊழியர்களை அனுமதிக்கிறார் என ஊழியர் நியாயமான அளவில் நம்பிக்கை கொண்டிருந் தாரா என்பதுமாகும். தொழிலகப் பொருட்களை எடுப்பது திருட்டு என முடிவு செய்யப்படுவதில் உள்ள பிரதான சிக்கல் என்னவெனில், தான் அப்பொருட்கள் எடுக்க அனு மதிக்கவில்லை என்பதை அந்த ஊழியர் எதுவித ஐயப்பாடும் இன்றித் தெரிந்து வைத்திருந்தாரா என்பதாகும்.

## வனவிலங்குகளின்

(19ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்ச்சிகள் பறவைகளையும், விலங்கு களையும் மனிதனுக்கு மிக நெருக்கமாகக் கொண்டுவர உதவுகின்றன.

இவைதவிர, African Queen Boat ride, Nature Boy Scene, Railway Ride, Elephant round-up என்பன சிறந்த கல்வி, பொழுது போக்கு நிகழ் ச்சிகளாகும். இவற்றுக்கு மேலாக சிறுவர்கள் விளையாடி மகிழ்ச்சியடையக்கூடிய பல விளையாட்டு நிகழ்ச்சிகள் தினமும் இடம் பெற்று வருகின்றன. வன விளையாட்டு மைதா னம், நீர் விளையாட்டு மைதானம் என்பன சிறுவர்களை அதிகமாகக் கவருபவை.

இங்கு முப்பதுக்கும் அதிகமான நிரந்தர உத்தியோகத்தர்களும், இருநூற்றைம்பதுக்கும் அதிகமான பருவகால உத்தியோகத்தர்களும் கடமையாற்றி வருகின்றனர். இதன் எதிர்கால முன்னேற்றத்துக்கு தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் முதலீட்டாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் செயற்பட்டுவருகின்றனர்.

இந்தச் சோலை பற்றிய மேலதிக விபரங் களுக்கு 1-800-461-9453 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கியுபெக் தேர்தல்

(18ம் பக்கத் தொடர்ச்சி)

திறமையாகப் பேசும் பிரெஞ்சுக்காரர். ஒட்டாவாவில் புளொக் கியுபெக்குவா பலமாக இருப்பதும், மாநிலத்தில் ஜக் பரிஸோ ஆட்சியமைத்ததும், பிரிவினையை முன்னோக்கிச் செலுத்துமென்பதில் ஐயமில்லை. ஆனால் இவர்கள் அனைவரும் உண்மையிலேயே கனடாவை விட்டுப்பிரிய விரும்புகின்றார்களா என்பது எவராலும் அறியமுடியாத ரகஸியம்.

வரப்போகும் சம்மத வாக்கெடுப்பில் கியுபெக் தமிழ் வாக்காளர்கள் பிரிவினையை ஆதரிப்பார்களா அல்லது எதிர்ப்பார்களா? பிரிவினை எனப்படுவது நாட்டுக்கு நாடு இடத்துக்கு இடம் வேறுபடலாமல்லவா?

## தீபாவளி
### நவம்பர் 2ல்

தமிழ் மக்களின் பண்டிகைத் திருநாட்களில் ஒன்றான தீபாவளித் திருநாள் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி புதன்கிழமையாகும்.

## சாயி பஜனைகள்

### ஸ்காபரோவில்

ஸ்காபரோ சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபரோ வுபர்ன் கல்லூரி மண்ட பத்தில் பிற்பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை சாயி பஜனை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த (அக்டோபர்) மாதத்தில் 9ம் 23ம் திகதிகளில் பஜனை நடைபெறும்.

### மிஸிஸாகாவில்

ஸ்ரீ சத்திய சாயி பகவான் சமித்தியி னரால் ஒவ்வொரு வாரமும் வியாழக்கி ழமை இரவு எட்டு மணி முதல் ஒன்ப தரை மணி வரை பஜனையும், தியான வழிபாடும் மிஸிஸாகாவில் 1447 அலக் ஸான்ட்ரா அவினியுவில் அமைந்துள்ள ஸ்ரீசத்ய சாயி பாபா நிலையத்தில் நடை பெறுகின்றது. இங்கு சிறுவர்களுக்கு சமயபாடப் போதனைகளும் நடைபெறு கின்றன. விபரங்களுக்கு (905) 274-8886 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### லான்ட்ஸ்ரவுணில்

லான்ட்ஸ்ரவுண் ஸ்ரீ சத்ய சாயி நிலைய த்தில் பிரதி வியாழன் மாலை 7:30 மணி தொடக்கம் 8:30 மணி வரை பஜனைகள் நடைபெறும். அதேதினம் மாலை 6:45 மணி முதல் 7:25 வரை கல்வி வட்டமும் பிரதி செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணி தொடக்கம் ஏழு மணி வரை பாலவிகாஷ் எனப்படும் சிறுவர் சமய வகுப்பும் நடைபெறும். லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு இல்ல 3ம் மாடி மண்டபத்தில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### டொன்மில்ஸில்

டொன்மில்ஸ் சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இரவு 7:30 மணி முதல் இரவு 9:00 மணி வரை பஜனை வழிபாடு, பிளெமிங்டன் பார்க் நூலக மண்டபத்தில் நடைபெறு கின்றது. இங்கு சிறுவர்களுக்கான பாலவிகாஷ் சமய போதனா வகுப்பு களும் நடத்தப்படுகின்றன. விபரங்க ளுக்கு 416-467-6393 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்டட்

**தமிழர்கள் மனதில் வைத்திருக்க வேண்டிய பெயர்**
**தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க வேண்டிய பெயர்**

மரக்கறி வகைகள், கடல் உணவுகள்,
கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும்
இலங்கை, இந்திய, கனடிய உணவுப்பொருட்களையும்,
தோசை, இடியப்பம் ஆகியவைகளையும் நியாயமான
விலையில் விற்பனை செய்பவர்கள்.

திருமணங்களுக்குக் தேவையான கூறை,
பட்டு வேட்டி, சால்வை, தலைப்பாகை, குத்துவிளக்கு,
பூமாலைகள், மணவறை, மண்டப வசதி, விருந்துபசார
உணவு வகைகள் ஆகிய அனைத்துக்கும்
எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# SIVA'S TRADING CO. LTD

**3852 Finch Ave.East, (Kennedy / Finch) Scarborough.**

## Tel: 321-2739

இலங்கைத் தமிழ் மக்களின்
குடிவரவு, அகதிநிலைக் கோரிக்கை விசாரணைகளுக்கு

அனுபவமும் ஆற்றலும்மிக்க வழக்கறிஞர்
MARK FROMKIN, LL. B.
Barrister & Solicitor

நீங்கள் கனடா வந்ததும் அகதிநிலை கோருவதற்கான விண்ணப்பப் பத்திரம் கிடைத்ததும்
தாமதமின்றித் தொடர்பு கொள்ளுங்கள்.
நீங்கள் எதுவித பணமும் செலுத்தத் தேவையில்லை.
அனுபவமுள்ள தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் சேவை கிடைக்கும்.
புதிய திட்டத்தின்கீழ் மனிதாபிமான மேன்முறையீடு,
மீளாய்வு ஆகியவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**சட்ட உதவிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்**

# MARK FROMKIN, LL.B.

Barrister & Solicitor

5160 Yonge St., Suite: 700, North York, Ontario. M2N 6L9

**PHONE: (416) 250 - 0818**

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் நிவேதன் வேலாயுதபிள்ளை

ஸ்காபரோ வேலாயுதபிள்ளை மாலினி தம்பதியரின் செல்வப் புதல்வனும், வேணியின் ஆசைத் தம்பியுமான நிவேதன் தனது மூன்றாவது பிறந்த நாளை அக்டோபர் முதலாம் திகதி கொண்டாடினார்.

வெண்ணிலவுக் கூட்டமொன்று
எங்கள் வீட்டினில் தவழவந்து
ஆண்டுகள் மூன்று...
அல்லிமலர்த் தோட்ட மொன்று
எங்கள் இதயத்தில் இதழ் விரித்து
ஆண்டுகள் மூன்று...
பண்ணிசை வீணையொன்று
மழலையால் கொஞ்ச வந்து
ஆண்டுகள் மூன்று...

நிவேதன் பல்கலையும் பெற்றி நீடுழி வாழ்கவென பெற்றார், உற்றார்,உறவினர்,நண்பர்கள் வாழ்த்துகின்றனர்.

12 Keon Place, Scarborough, Canada

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





### செல்வன் கௌரிசங்கர் விஜயகுமாரக் குருக்கள்

ஸ்காபரோ பேர்ச்மவுன்ட் வீதியில் வசிக்கும் ஸ்ரீகௌரி மங்கள சேவை நிறுவன அதிபர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களதும் ஸ்ரீமதி ஜெயந்தி அவர்களதும் ஏகபுதல்வன் செல்வன் கௌரிசங்கர் இந்த மாதம் 25ம் திகதி தமது முதலாவது பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடவுள்ளார்.

செல்வன் கௌரிசங்கர் பல்கலைகளும் தெளிவுறக் கற்று, தம் மூத்தோர் காட்டிய வழியில் சீரிய வாழ்வு வாழ்ந்திட அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அக்கா, பாலசுப்பிரமணியப் பெரியப்பா, நந்தன் மாமா, சுதா மச்சான், தயா மாமா, ஜெயா மாமா, கிருஷ்ணராஜப் பெரியப்பா, பெரியம்மா, ரஜீவ்ஹரன் அண்ணா, ரகுராம் அண்ணா, ரமணன் தம்பி உட்பட உற்றார் உறவினர்கள் அனைவரும் இஷ்ட தெய்வங்கள் அனைத்தையும் பிரார்த்து வாழ்த்துகின்றனர்.

## பேச்சு, பண்ணிசைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றனர்





கனடாவில் கடந்த ஜுலை மாதம் நடை-பெற்ற அனைத்துலக சைவ சித்தாந்த மகாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு, பண்ணிசைப் போட்டிகளில் பாலர் பிரிவில் சாயிபிருந்தா அருந்தவ சண்மு கநாதனும், கீழ்ப் பிரிவில் ஆதிரை சிவபாலனும் தலா இரண்டு தங்கப் பதக்கங்களை அண்மையில் நடந்து முடிந்த றிச்மன்ட்ஹில் பெருமாள் உற்சவ பூங்காவனத்திலன்று பெற்றுக் கொண்டனர். சங்கீதபூஷணம் இராச லிங்கம் அவர்களின் புதல்வியும், கொழும்பு இந்துக் கல்லூரியில் சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றியவ ருமான திருமதி. ஜெயராணி சிவபால னின் மாணவிகளே இவர்கள் இருவரும் என்பது குறிப்பிடத்தக்கது. பரிசு பெற்ற இரு சிறுமிகளதும் படங்கள் மேலே பிரசுரமாகியுள்ளன.

## தமிழ், இந்து சமய பாட வகுப்புகள்

மிஸிஸாகா, ஸ்காபரோ, நோர்த் யோர்க் மற்றும் ரொறன்ரோ பெரும்பாக நகரங்கங்களில் தமிழ், இந்து சமயபாட வகுப்புகளைக் கனடா இந்து சமயப் பேரவை நடத்தவுள்ளது.

இவ்வகுப்புகளில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்களும், ஆசிரியர்களும் கீழே தெரிவிக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். வகுப்புகள் இலவசமாக நடத்தப்படும். ஆசிரியர்களுக்குப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு திருமதி. கருணா தனபாலசிங்கம் (416-287-3105), திருமதி. வசந்தமலர் இரத்தினசபாபதி (416-495-9420), செல்வி. பிருந்தா தம்பிராஜா (416-490-0479), திரு. அடியார் (416-769-7747) ஆகியோருடன் தொடர்பு கொள்ளவும்.

## முத்திரை விலை அதிகரிப்பு இல்லை

கனடாவின் உள்நாட்டுத் தபாற் சேவைக் கான கட்டணத்தை 43 சதத்திலிருந்து 45 சதத்தினால் அதிகரிக்க அரசாங்கம் எடுத்த முயற்சியை அமைச்சரவை நிராகரித்து விட்டது.

# 'ஆழிக்குமரன்' ஈழத்தவர் சொத்து; அவரது சாதனைகள் பெற்றுத் தந்த புகழ் என்றும் எமக்கே சொந்தமானவை

மொன்றியல் ரினிற்றி புனித தேவாலய அரங்கு.

மொன்றியலில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பரிச்சயமில்லாத அரங்குகளில் இதுவும் ஒன்று. ஆனாலும் ஆகஸ்ட் 27ம் திகதி மாலை 'ஆழிக்குமரன்' நூல் விழாவுக்காக அரங்கு அழகுடுத்தியிருந்தது. இலக்கிய ஆர்வமுற்று வந்தவர்களுக்கு இடம்பிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை.

சுமார் 7:30 மணியளவில் விழா ஆரம்பமானது. மண்டபம் மக்கள் வெள்ளத்தில் திணறியது என்று சொல்ல இது உல்லாச களியாட்ட விழாவல்லவே! சபை இலக்கிய நெஞ்சங்களால் நிறைந்திருந்தது. மொன்றியலின் சிறப்புமிக்க பேராளர், எழுத்தாளர் இணையத்தின் தலைவர் திரு. கே.ரி. சண்முகராஜா விழாவுக்குத் தலைமையேற்க, தமிழர் கலாசார மரபுக்கிணங்க கியுபெக் சைவ மகா சபையின் தலைவர் திரு. பரம்சோதி மங்கள விளக்கேற்ற, தாய்மண்ணின் தியாகிகளுக்காக இரு நிமிட மௌன அஞ்சலியைத் தொடர்ந்து கலைஞர் எஸ். சி. மகேந்திராவின் வரவேற்புரையுடன் நூல் அரங்கு ஆரம்பமானது.

"ஆழிக்குமரன் ஆனந்தன் வல்வையில் பிறந்தாலென்ன வந்தாறுமூலையில் பிறந்தாலென்ன அவன் ஈழமக்களின் சொத்து. அவன் சாதனைகளால் கிடைத்த புகழ் முழு ஈழமக்களுக்கும் கிடைத்த பெருமை: என்று குறிப்பிட்ட திரு. கே.ரி. சண்முகராஜா தொடர்ந்து பேசுகையில் உலகெங்கும் சிதறிவாழும் ஈழத்தமிழ் எழுத்தாளரிடையே ஒரு புரிந்துணர்வுடனான கூட்டமைப்பு ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.



"ஈழகேசரி இராஜகோபால் ஒரு உணர்ச்சி மிக்க மனிதர். அவரது எழுத்துகள் மக்கள் மனதை ஆழத் தொட்டவை' என்று குறிப்பிட்ட தமிழர் தகவல் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், இராஜகோபாலின் சமகாலப் பத்திரிகையாளன் என்னும் வகையில் பழைய அனுபவங்கள் பலவற்றை நினைவுகூர்ந்தார்.

**மொன்றியல் விழாவின் தொகுப்பு**
**வெண்ணிலா**


சூரியன் ஆசிரியர் திரு. ஆர். என் லோகேந்திரலிங்கம் உரையாற்றுகையில், தென்னிந்தியக் கலைஞர்கள் எமது மத்தியில் வந்து தங்கள் பைகளை நிரப்பிக் கொண்டு செல்லும் இக்காலத்தில், இங்கு வரும் எமது எழுத்தாளர்கள் தங்களின் மனதையாவது நிரப்பிச் செல்லக்கூடியவாறு நாம் நடந்துகொள்ளப் பழக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சாதனை என்பது உடல் வலுவின் வெளிப்பாடு அல்ல. அது மனவுறுதியின் வெற்றி என்று சொன்ன திரு. சின்னத்தம்பி வேலாயுதம், சிலை அமைத்துப் போற்றக் கூடிய சாதனையாளர் அவர் என்றும் தெரிவித்தார். ஆனந்தன் தமிழ்மக்களிடையே தமது வாரிசுகளை உருவாக்காமல் போனது தமிழ் மக்களின் துரதிர்ஷ்டமே என்று திரு.கே.பி. லிங்கம் சொன்னார். ஆனந்தன் பிறந்த பதியில் தாம் பிறந்தது தாம் பெற்ற பேறே என்று கூறினார் சைவ மகா சபைத் தலைவர் திரு. பரம்சோதி.

நூலாசிரியர் திரு. இராஜகோபால் தமது பதிலுரையில், "ஈழத் தமிழரிடையே இது போன்ற வரலாற்று நூல்கள் அரிதாகையால் தமிழர் வரலாறு மழுங்கடிக்கப்படுகின்றது. வரலாறு திரித்துக்கூறப்படுகின்றது. எனவே வரலாற்று நூல்கள் எழுதப்பட வேண்டிய தேவை அவசியமாகியுள்ளது. எழுத்துகள் வெறும் வியாபாரப் பொருளாக இருக்கக்கூடாது. அவை மக்களை வழிநடத்திச் செல்பவையாக இருக்க வேண்டும்" என்றார்.

விழா அமைப்பாளர்கள் சார்பில் பெரியார் எஸ். ஏ. சிவபாதம் அவர்கள் திரு. ராஜகோபாலுக்கு மலர் மாலை சூட்டி, நினைவுப் பரிசாகக் கேடயம் வழங்கிக் கௌரவித்தார்.

திரு. இராஜகோபாலின் புதல்வி செல்வி ஷர்மினி, மற்றும் ஜெயவேணி வேலாயுதபிள்ளை ஆகியோரின் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் இடைவேளையின் பின்னர் இடம்பெற்றன. திருமாவளவன் நன்றியுரை நிகழ்த்தினார். நேரம் நள்ளிரவைத் தாண்டிய பின்னரும் மண்டப வாசலில் இனிமையான கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.





# தமிழ் முதியோர் மன ஆறுதல் திட்டம்

**கனேடிய முது தமிழர் மன்றப் பெரியார் பலர் பங்குபற்றும் திட்டம்**

PEACE of MIND

வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் புலம் பெயர்ந்த முதியோர் பலரிற்கு ஒரு மனக்கலக்கம். கனடாவில் இறக்க நேரிடும்போது கடைசிக்காலச் செலவுகள் எவ்வளவு? இதற்கு யார் பொறுப்பு? யாரிடம் ரொக்கப் பணம் உண்டு? இந்தக் கவலையை நீக்கி மன ஆறுதல் பெற நல்ல திட்டம் உண்டு.

இதுவே **தமிழ் முதியோர் மன ஆறுதல் நிரந்தரக் காப்புறுதித் திட்டம்.** உங்கள் வயதிற்கேற்ப உத்தரவாதமுள்ள மிகவும் மலிவான கட்டணம். இக் கட்டணம் பின்னர் ஒரு சதமும் உயரமாட்டாது. உதாரணமாக, .ஒரு 65 வயதுடைய ஆணுக்கு $10,000 டாலர் நலன் பெற மாதக் கட்டணம் $32 மட்டுமே!

உங்கள் வயதிற்கேற்ப உதாரணங்கள் சில: (சாதாரண தேக சுகம் உடையோருக்கு)

| இள முதியோருக்கான $25,000 நலன் தரும் காப்புறுதி | | |
|---|---|---|
| **உங்கள் வயது** | **ஆண்** | **பெண்** |
| 50 ஆகவிருப்பின் | $32 | $27 |
| 55 ஆகவிருப்பின் | $42 | $33 |
| 60 ஆகவிருப்பின் | $54 | $43 |
| **முதியோருக்கான $10,000 நலன் தரும் காப்புறுதி** | | |
| **உங்கள் வயது** | **ஆண்** | **பெண்** |
| 65 ஆகவிருப்பின் | $32 | $26 |
| 70 ஆகவிருப்பின் | $44 | $35 |
| 75 ஆகவிருப்பின் | $63 | $50 |
| 80 ஆகவிருப்பின் | $94 | $77 |

**Money Back Guarantee!**

**100% Guaranteed Lowest Rates!!**

இது டெலிவிஷனில் விளம்பரம் செய்யப்படும் காப்புறுதியைவிட பன்மடங்கு சிறந்தது. மன ஆறுதல் காப்புறுதி, விலை மலிவு மட்டுமல்ல: கட்டணம் தொடங்கிய முதல் நாளிலிருந்தே, மரணம் நேரிட்ட நேரம் முழுக் காப்புறுதி நலன் பணம் பெறலாம் என்ற உத்தரவாதமுண்டு. கனடாவின் நம்பிக்கையும் நாணயமும் நிறைந்த காப்புறுதி ஸ்தாபனங்களான TransAmerica (A+Am Best Rating), Maritime Life - John Hancock (AAA Rating) இந்த மன ஆறுதல் திட்டத்தைத் தருகின்றன. மரணம் உலகில் எங்கு ஏற்பட்டாலும் பணம் பெறலாம் என்ற உத்தரவாதமுண்டு.

இன்றே உங்கள் **மன ஆறுதல் காப்புறுதித் திட்டத்தைப்** பற்றிய மேலதிக விபரங்களைப் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

**யோகி தம்பிராஜா** F.C.A., F.C.M.A.(U.K.)

**(416) 412-4267**

FORTUNE FINANCIAL

ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும் கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஜயாமணி) (புங்குடுதீவு -10)

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
மற்றும்



சடைநாகம், தலை நகை செற்
முத்து மணவறை
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூஜைப் பொருட்கள்
ஆலய வைபவங்களுக்கான
முத்துச் சப்பரம்

**ஆகியவைகளுக்கு என்றும் எப்பொழுதும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

**Tel: (416) 266-3333**

628 E, Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

**SRISIVA JEWELLERY**

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

**(416) 531-4867**